Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

சுடர் : 39
கதிர் : 266

ஞாயிற்றுக்கிழமை
18 ஒகஸ்ட் 2024

ஆவணி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




(CR/42939)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் திருவிழாவின் 10ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.18

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

10 ஆம் நாள் நிகழ்வு, நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோர் முன்னிலை வகிக்க, யாழ்ப்பாண பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை இந்துக் கற்கைகள் பீடத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ். போதனா மருத்துவமனை மனநல மருத்துவ நிபுணர் மருத்துவர் சுப்பிரமணியம் சிவசுதன், சிறப்பு அதிதியாக கரவெட்டி பிரதேச செயலர் திருமதி சிவகாமி உமாகந்தன் மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் குமரேசன் பாலசண்முகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.


கம்பர்மலை ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, கும்பவாழி வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, கற்பகப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, நவிண்டில் பெருயஞ் சீமா ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை, பரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலை மற்றும் அல்லையம்பதி சிவசுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விஷேட நிகழ்வாக பானுஜன் வசந்தபாலா வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஒ-45)




## நூல் அறிமுக விழா

பத்மா இளங்கோவனின் சிறுவர் இலக்கிய நுட்பங்கள், சிறுவர் தமிழ் அமுதம், கொரோனாவின் தடங்களில் ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வு முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் யாழ். அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் வெளியீட்டுரையை ரி.இளங்கோவனும், சிந்தனை உரைகளை முனைவர் தே.தேவானந், எழுத்தாளர் இயல்வாணன், ஆசிரியர் மயூரன் ஆகியோரும் ஆற்றுவர். சபா தனுஜன் தொகுத்து வழங்கவுள்ள நிகழ்வில் ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர். (ஒ-25)



## அலங்காரக் கந்தனின் 8 ஆம் நாள் உற்சவம்!

யாழ்ப்பாணம், ஓக.18

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழாவின் எட்டாம் நாள் மாலை உற்சவத்தை முன்னிட்டு நல்லை கந்தப்பெருமான் யாழி வாகனத்தில் வெளிவீதி உலா வந்தார். (ரி-100)






## தமிழ்க் குமரா ! தயங்குவது தான் ஏனோ?

தந்தைக்கே உபதேசம் செய்த
நல்லையம்பதியில் உறையும் தமிழ்க்குமரா!
அறிவுக் கடல் ஔவை மூதாட்டியையே
தடுமாற வைத்த தத்துவ வித்தகளே!!
தமிழ் மன்னன் சங்கிலியனின்
இராசதானியாய் அமைந்திருந்த
நல்ல ஊர் தனிப் கோவில்கொண்டு
ஒரேயொரு ரூபாவோடேயே
தரணியாளும் சக்திகொண்ட தயாளனே!!!
தமிழ் ஆன்மீகப் பெரியவர்களுக்கும்
தமிழ் அரசியலாளர்களுக்கும்
நல் வழி காட்டத் தயங்கி நிற்கும்

வீரப்பதி விநோதன்
தென்கறுணை கரவெட்டி

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.18


இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளன. இணுவையூர் ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (ஒ-45)

## திருவள்ளுவர் சிலை திறப்பு


முல்லைத்தீவு, ஓக.18

முல்லைத்தீவு, குமுழமுனை மகா வித்தியாலயத்தில் திருவள்ளுவர் சிலை குமுழமுனை மகா வித்தியாலயத்தின் பழைய மாணவனும், கனடாவில் வசிப்பவருமான கந்தசாமி பத்மநாதனின் நிதி அனுசரணையுடன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திருவள்ளுவர் சிலையை திரை நீக்கம் செய்து வைத்தார். (ஒ-4513)







## வடம்பிடிக்க துயர் துடைப்பான்

மந்திரங்கள் ஏதும் இன்றி மௌன மொழி ஏற்றாயே!
தஞ்சமென வருவோர் குறை தீர்க்கும் சந்நிதி அரசே!!
அறுபத்து ஐந்து இலை அமுது படைத்து உனை நாடி வரும்
அடியோர் பசி போக்கும் அன்னதான கந்தனே!!!
மயிலோன் ஆலயத்து மணியோசை கேட்கையில்
மனக்குறைகள் தீர்ந்திடுமே!
வள்ளி ஆற்றோரம் அமர்ந்து அடியவர்களுக்கு
அருள் பாலிக்கும் வள்ளி நாயகனே!!
அடியவர்கள் வடம்பிடிக்க துயர் துடைக்க தேர் ஏறி வருகிறான்
கல்லோடை கந்தன்.

த. பிருந்தன்,
சந்நிதி கோவிலடி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




" தேன் மாதிரி வாக்குறுதியைத் தந்திட்டு விசத்தைப் பருக்கிறதுதான் அரசியல்வாதியளின்ர குணம் கண்டியளோ"

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 266

ஞாயிற்றுக்கிழமை
18 ஓகஸ்ட் 2024

ஆவணி 02
வள்ளுவர் ஆண்டு 2055



# மதப்பன்மைத்துவம் நாட்டில் பேணப்படும்

## தங்காலையில் வைத்து அநுர வாக்குறுதி

**கொழும்பு, ஓக. 18**

**எமது ஆட்சியில் நாட்டின் மதப் பன்மைத்துவம் பேணிப் பாதுகாக்கப்படும். மத மற்றும் கலசார சீரழிவுகளுக்கும் முரண்பாடுகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

15

பெரமுனவின் எம்.பி.

## கொடித்துவக்கு சஜித் பக்கம்!

கொழும்பு, ஓக. 18

பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணாதாஸ கொடித்துவக்கு ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு தனது ஆதரவை வழங்கத் தீர்மானித்து ஐக்கியமக்கள்சக்தியில் இணைந்துள்ளார்.

மாத்தறையின் அகுரெஸ்ஸ நகரில் சஜித்துக்கு ஆதரவாக நேற்று

15



## நான் உரத்தைத் தந்தேன் நீங்கள் விளைவித்தீர்கள்!

### விவசாய பூமியான அநுராதபுரத்தில் ஜனாதிபதி ரணில் தேர்தல் பரப்புரை

கொழும்பு, ஓக. 18

நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்திருந்தபோது, நாட்டை மீட்டெடுத்தவர்கள் சஜித்தோ, அநுரவோ, ஹர்ஷ டி சில்வாவோ, ஹந்துன்நெத்தியோ அல்ல. மாறாக விவசாயிகளே. நான் உரத்தைத் தந்தேன். நீங்கள் விளைச்சலைத் தந்தீர்கள் என்று ஜனாதிபதி ரணில் தனது தேர்தல் பரப்புரையில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலின் தொடர் தேர்தல் பரப்புரையின் முதலாவது கூட்டமும் பேரணியும் 'விவசாய நகரான அநுராதபுரத்தில்' நேற்று

15



பிவிதுரு ஹெல உறுமய

## பிரிந்த அணியினர் ரணிலுடன் இணைவு

கொழும்பு, ஓக. 18

உதய கம்மன்பில தலைமையிலான பிவிதுரு ஹெல உறுமய கட்சியில் இருந்து பிரிந்த குழுவினர் ஜனாதிபதி ரணிலுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளர் உபுல் கோனார மற்றும் ஆராச்சிகும்புரே சோபித தேரர் ஆகியோர் தலைமையிலான குழுவொன்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

கடந்த நெருக்கடிகளின் போது பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய

15

## ஊழலும் மோசடிகளுமே நாட்டில் மிகைந்துள்ளன

### சஜித் சரமாரித் தாக்கு

கொழும்பு, ஓக. 18

நாடொன்றை கட்டியெழுப்புவதற்குத் தெளிவான வேலைத் திட்டங்கள் இருக்க வேண்டும். ஆனால், இன்றைய அரசாங்கத்தில் ஊழலும் மோசடிகளுமே எஞ்சியுள்ளன என்று ஜனாதிபதி வேட்பாளர் சஜித் தெரிவித்தார். களுத்துறையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் அவர் மேலும்

15

முல்லை.

## மருத்துவமனையில் நோயாளியின் மோதிரம் மாயம்

முல்லைத்தீவு, ஓக. 18

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகசென்றநோயாளி ஒருவர் மருத்துவமனையில் இருந்தபோது மோதிரம் காணாமற்போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

இரத்தினக்கல் பதித்த இரண்டரைப் பவுண் மோதிரமே காணாமற்போயுள்ளது. அதன் தற்போதைய பெறுமதி சுமார் 6 இலட்சம் ரூபா

15

## மனவளர்ச்சி குன்றிய யுவதி மீது கூட்டுவன்புணர்வுக் கொடூரம்!

### சிறியதந்தை உள்ளிட்ட மூவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 18

மனவளர்ச்சி குன்றிய 18 வயதேயான யுவதி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் அடிப்படையில், அவரின் சிறியதந்தை உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

15

# சஞ்சீவி

## வன்முறையில் ஈடுபட்ட குழுவொன்று கைது!

### டுபாயில் இருந்து வழிநடத்தப்பட்டனராம்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல்களை மேற்கொண்ட குற்றச்சாட்டில் மூவ

15

## அன்னதானக் கந்தனுக்கு இன்று இரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 18

'அன்னதானக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்

15

## தவறான முடிவெடுத்து மூதாட்டி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 18

தனிமையில் வசித்துவந்த வயோதிபப் பெண் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீசாலை வடக்குப் பகுதியில்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துஜா உயிரிழப்பு விடயத்தில் விசாரணைக்கு ஒத்துழைத்தோம்

## மருத்துவ நிபுணர்கள் தெரிவிப்பு

**மன்னார், ஓக. 18**

**மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடந்த 28ஆம் திகதி உயிரிழந்த சிந்துஜாவின் உயிரிழப்புக் குறித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் என்ற வகையில் நாங்கள் விசாரணைகளுக்கு ஒத்துழைத்ததோடு நிறுவன சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடந்துகொண்டோம். அதனால் பொதுவான கருத்துகளை நாம் வெளியிட்டிருக்கவில்லை என மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.**

மன்னார் மாவட்ட மருத்துவமனை அபிவிருத்திக்குழு ஊடாக ஊடகங்களுக்கு கடந்த வியாழக்கிழமை மாலை அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

திருமதி ஆ.சிந்துஜா என்ற இளம் தாயின் உயிரிழப்பு மருத்துவர்களாகிய எங்களையும் வேதனைப்படுத்தியது.

ஒரு அரச நிறுவனத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் என்ற வகையில் நாங்கள் விசாரணைகளுக்கு ஒத்துழைத்ததோடு நிறுவன சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடந்து கொண்டோம்.

பக்கச்சார்பற்ற விசாரணை நடைபெற்று உண்மைகள் கண்டறியப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகங்கள் வாயிலாக மருத்துவமனைப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி பாதிக்கப்பட்ட குடும்பத்தை உள்ளடக்கிய மருத்துவமனைப் பணிப்பாளர் தலைமையிலான மீளாய்வு நடைபெற்றது. தாயின் உயிரிழப்புத் தொடர்பில் பணிப்பாளரால் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 30ஆம் திகதி மருத்துவமனைப் பணிப்பாளரால் ஆரம்பகட்ட புலன் விசாரணை குழு நியமிக்கப்பட்டது. மறுநாள் 31ஆம் திகதி பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரால் உயிரிழப்புத் தொடர்பான விசாரணை கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாதம் முதலாம் திகதி சுயாதீன விசாரணைக்கு, மருத்துவமனைப் பணிப்பாளர் மாகாண சுகாதாரப்பணிப்பாளரிடம்கோரிக்கை விடுத்தார். 2ஆம் திகதி பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரின் ஆரம்ப புலன் விசாரணை குழு நியமிக்கப்பட்டது. மறுநாள் 3ஆம் திகதி மாகாண சுகாதாரப் பணிமனையின் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. கடந்த 8ஆம் திகதி சுகாதார அமைச்சின் விசாரணை மீளாய்வு நடைபெற்றது.

தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் சுகாதார அமைச்சின் மூலம் தீர்மானிக்கப்படும் என்பதால் இறந்த இளம் தாய்க்கு நீதி வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இந்த அறிக்கையானது, பொதுமக்களுக்குத் தெளிவை ஏற்படுத்தி, மக்களுக்கும் மருத்துவமனைக்கும் இடையிலான நம்பிக்கையை மீளக் கட்டி எழுப்பும் செயற்பாடுகளில் ஒன்றாகவே வெளியிடப்படுகிறது- என்றுள்ளது. (ஒ-56,60)



# பருத்தித்துறையில் ஓ.எம்.பி. விசாரணை

யாழ்ப்பாணம், ஓக. 18

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகள் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

கரவெட்டி, பருத்தித்துறை,மருதங்கேணி பிரதேச செயலகங்களை உள்ளடக்கி குறித்த விசாரணைகள் இடம்பெற்றன. (ச-27,100)



# மங்களவின் சகோதரி மகள் அரசியலில் பிரவேசம்

## சஜித்துக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 18

அரசியல் அனுபவம் வாய்ந்த, சிரேஷ்ட மற்றும் நன்மதிப்புமிக்க அரசியல்வாதிகளில் ஒருவரான மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் சகோதரியின் மகளான திருமதி சஞ்சல குணவர்த்தன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார்.

மங்கள சமரவீரவின் உயிரிழப்பின் பின்னர் அவரது குடும்பத்தில் இருந்து அரசியலுக்கு பிரவேசித்த முதல் நபராக அவர் உள்ளார். அவரை மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்ட அமைப்பாளராக சஜித் பிரேமதாஸ நியமித்தார். (ச-இ)

## போதனா மருத்துவமனையில்

# மகப்பேற்று விடுதி அமைக்காவிடின் தொடர் உண்ணாவிரதப் போராட்டம்

## மருத்துவ நிபுணர் சரவணபவா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் புதிதாக மகப்பேற்று விடுதிகள் அமைக்கப்படாவிடில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நான் தொடர் உண்ணாவிரதமிருந்து உயிர்துறப்பேன் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மகப்பேற்றுப் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் ந.சரவணபவா வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

நல்லூர்க் கந்தன் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவின் ஏற்பாட்டில் நல்லைக் குமரன் மலரின் 32ஆவது இதழ் வெளியீட்டு விழாவும், யாழ் .விருது வழங்கும் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்றபோது கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னர் தமிழ்ச் சமுதாயம் தலை நிமிர்ந்து வாழ்ந்த காலத்தில் மகப்பேற்றுச் சிகிச்சை மருத்துவ வசதிகளும் யாழ். மாவட்டத்தில் மேலோங்கியிருந்தன. தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவமனை, இணுவில் மருத்துவமனை, புத்தூர் மருத்துவமனை, மூளாய் மருத்துவமனை போன்ற பல மருத்துவமனைகள் மகப்பேற்று மருத்துவமனைகளாகத் திகழ்ந்தன.

எனினும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தற்போது மகப்பேற்று விடுதிகள் இல்லை. இது மிகவும் துன்பகரமான செய்தி. கடந்த 2013ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலிருந்து மகப்பேற்று விடுதிகள் இடிக்கப்பட்டுவிட்டன. பல முயற்சிகள் எடுத்தபோதும் இன்று வரை அவை அமைக்கப்படவில்லை. இந்த வருட ஆரம்பத்தில் சுகாதார அமைச்சர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வருகைதந்த போது மகப்பேற்று விடுதியை முன்னர் இருந்தது போன்று அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். எனினும், இதுவரை மகப்பேற்று விடுதிகளை அமைப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை - என்றார். (ஒ-60)



# ஐ.தே.க. அமைப்பாளராக ராஜாராம் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 18

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் மற்றும் தொழில் நிபுணர்கள் பிரிவின் யாழ். மாவட்ட ஒருங்கமைப்பாளராக புருசோத்தமக்குரு ராஜாராம் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் கட்சியின் பொதுச் செயலர் பாலித ரங்க பண்டாரவால் கடந்த 15ஆம் திகதி வழங்கப்பட்டது. ராஜாராம், 2010ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர் என்பதுடன் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் துறையில் 2016இல் பட்டமும் 2015இல் சீமா கல்வியையும் பூர்த்தி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# 13 வருடங்களின் பின்னர் யானைகள் கணக்கெடுப்பு

கொழும்பு, ஓக. 18

தேசிய ரீதியாக யானைகள் கணக்கெடுப்பானது 13 வருடங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இது தொடர்ச்சியாக 17,18,19 ஆம் திகதி களில் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு,வெலிஓயா ஆகிய நான்கு பிரதான தொகுதிகளின் வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 11 உப பிரிவுகளின் 73 மத்திய நிலையங்களில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக மாவட்டத்தில் 155 கணிப்பாளர்கள் பயன்படுத்தப்படவுள்ளனர். அதேவேளை இலங்கையில் இறுதியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-19,27,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# புலிகள் மீதான கனேடிய தடை

## இலங்கை அரசு வரவேற்பு

கொழும்பு, ஓக. 18

கனேடிய அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும், உலகத்தமிழர் பேரவையையும் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவித்ததை இலங்கை அரசாங்கம் வரவேற்றுள்ளது. உலகத்தமிழர் பேரவை இப்போது புலிகள் சார்பில் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக கனேடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-6)

# நாடாளுமன்றத்தைக் காப்பாற்றியதால் ஜனாதிபதித் தேர்தல் நடக்கின்றது

## வேட்புமனுத்தாக்கலின் பின்னர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 18

நாடாளுமன்றத்தைக் கைப்பற்றும் முயற்சியைத் தடுத்து நிறுத்தியதால்தான் இன்று தேர்தல் நடக்கின்றது. புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடரவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின் பின்னர் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2022ஆம் ஆண்டு ஜுலை மாதமளவில் வீடுகள் எரிக்கப்பட்டன. ஜனாதிபதி மாளிகை கைப்பற்றப்பட்டது. ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அலரிமாளிகை என்பனவும் கைப்பற்றப்பட்டன. எனது வீட்டையும் எரித்தனர். இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே நான் நாட்டைப் பொறுப்பேற்றேன்.

அரசாங்கத்தை கொண்டு நடத்த முடியுமா என்ற சந்தேகம் பலருக்கும் இருந்தது. நாடாளுமன்றத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சித்தனர், எனினும், நானும், சபாநாயகரும் அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தினோம். அதனால்தான் இன்று தேர்தலை நடத்தக் கூடியதாக உள்ளது.

அரசாங்கத்தை பதவி விலகவைத்துவிட்டு, பொறுப்பை ஏற்காது எதிரணிகள் தப்பியோடின. எனவே, அரசாங்கத்தைப் பொறுப்பேற்பதற்கு எதிரணிகளுக்கு தகுதி உள்ளதா? அவர்களுக்கு ஜனநாயகத்தை வழங்கமுடியுமா? வரிசை யுகத்தை நாமே முடிவுக்குக் கொண்டு வந்தோம். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர வேண்டும், அவற்றைநிறுத்த முடியாது. புதிய பொருளாதாரத்தை ஏற்படுத்த வேண்டுமெனில் அரசாங்கத்தின் பயணம் தொடரவேண்டும். அதற்காக எனக்கு வாக்களியுங்கள்- என்றார். (ஒ-44)



வேலணைப்பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான தகவல் அறியும் உரிமை தொடர்பான பயிற்சிநெறி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. வேலணைப் பிரதேச செயலர் க.சிவகரன் கலந்து கொண்டு தகவல் அறியும் உரிமை தொடர்பான விவரங்கள், அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான கருத்துக்களை வழங்கினார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** செயல்களில் இலாபம் காணும் நாள். எதிர்பார்ப்பு நிறைவேறும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.நினைத்ததை நடத்தி முடிப்பீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை சரிசெய் வீர்கள். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** தடைகளைச் சந்திக்கும் நாள். உங்கள் முயற்சியில் இழுபறி ஏற்படும். கடன் கொடுத்தவர்க ளால் நெருக்கடிக்கு ஆளாவீர். திட்டமிட்டு செயற் பட்டு வெற்றி காணும் நாள். உங்கள் விருப்பம் நிறை வேறும். சங்கடம் நீங்கும்.

**மிதுனம்:** விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் தோன்றும். மனம் குழப்பம் அடையும். நன்மை காணும் நாள். வியா பாரத்தில் கவனமாக செயற்பட்டு லாபம் அடைவீர். முயற்சி இலாபம் தரும்.

**கடகம்:** பணிபுரியும் இடத்தில் உங்கள் வேலையில் கூடுதல் கவனம் தேவை. நினைப்பது நிறைவேறும் நாள். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்கு வரும். உங்கள் முயற்சியில் இலாபம் உண்டாகும். கவனமாக செயற்பட வேண்டிய நாள்.

**சிம்மம்:** முயற்சி வெற்றியாகும் நாள். இழுபறியாக இருந்த வேலை முடிவிற்கு வரும். தொழில் முன்னேற் றம் அடையும். சங்கடம் விலகும் நாள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும். உற்சாகத்துடன் செயற்பட்டு நினைத்ததை சாதிப்பீர்.

**கன்னி:** போராடி வெல்ல வேண்டிய நாள். ஆர்வத்து டன் மேற்கொள்ள வேண்டிய செயல் இழுபறியாகும். யோகமான நாள். குடும்பத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**துலாம்:** நெருக்கடிக்கு ஆளாகும் நாள். உங்கள் முயற்சியில் சில தடைகளை சந்திப்பீர். உதவி புரிவதாக சொன்னவர் விலகிச் செல்வர். அதிர்ஷ்ட வாய்ப்பு தேடிவரும் நாள். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி நீங்கும். உங்கள் செயல் இலாபமாகும்.

**விருச்சிகம்:** திட்டமிட்டு செயற்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த வரவு தள்ளிப்போகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். செயல் இலாபமாகும் நாள். நீங்கள் எதிர்பார்த்த வரவு வரும். புதிய பொருள்கள் சேரும்.

**தனுசு:** உங்கள் நிலை உயரும் நாள். நீங்கள் எதிர்பார்த்ததகவல்வரும்.முயற்சிவெற்றிஅடையும். நினைப்பது நிறைவேறும். முன்னேற்றமான நாள். மனதில் இருந்த குழப்பம் விலகும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை தீரும்.

**மகரம்:** அலைச்சல் அதிகரிக்கும் நாள். உங்கள் செயல்களில் சங்கடமும் தடைகளும் தோன்றும். திறமை வெளிப்படும் நாள். எதிர்பார்த்த லாபம் உண்டாகும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும்.

**கும்பம்:** குழப்பத்துக்கு ஆளாகும் நாள். உங்கள் செயல்களில் எதிர்பாராத நெருக்கடி தோன்றும். திடீர் செலவு ஏற்படும். கையிருப்பு கரையும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை விலகும். நீங்கள் எதிர்பார்த்த பணம் வரும்.

**மீனம்:** விட்டுக்கொடுத்து செயற்பட வேண்டிய நாள். மேற்கொள்ளும் முயற்சி இன்று இழுபறி யாகும் எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். நெருக்கடி நீங்கும் நாள். உங்கள் விருப்பம் பூர்த்தியாகும். குடும்பத்தில் நிலவிய குழப்பம் விலகும்.





வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு சந்நிதி முருகன் ஆலய வருடாந்த உற்சவத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இரவுத் திருவிழாவில் முருகப்பெருமான் மயில்வாகனத்தில் எழுந்தருளி அடியவர்களுக்குக் காட்சிளித்தார். (ச-26)

## மரக்கன்றுகள் நடுகை



கிளிநொச்சி, ஓக.18

முருகானந்தா கல்லூரி வளாகத்தில் பயன்தரு மரங்களை வளர்க்கும் வேலைத் திட்டத்தின் முதற்கட்டமாக வன்னித் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் பங்களிப்புடன் ஒரு தொகுதி மரக்கன்றுகள் மாணவர் நாடாளுமன்றத்தினரின் ஏற்பாட்டுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடப்பட்டன.

நிகழ்வில் கிளிநொச்சி வடக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.தர்மசீலன், பசுமைப் புரட்சிக்காக தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் எஸ்.தரன்ரீ, அரச கரும மொழிகள் திணைக்கள விரிவுரையாளர் எஸ்.தமிழ்ச்செல்வன், எஸ்.தீபன் மற்றும் வன்னித் தமிழ் மக்கள் ஒன்றிய செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-13)

## விருது வழங்கும் விழா

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியத்திட்ட நடைமுறைப்படுத்தலில் தேசிய இலக்கினை பூர்த்தி செய்தமைக்கான விருது வழங்கும் விழா வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது தேசிய இலக்கை பூர்த்தி செய்த முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தேசிய விருதினை இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் உமாமகேஸ்வரனுக்கு வழங்கிக் கௌரவித்தார். உதவி மாவட்ட செயலாளர் திருமதி லிசோ கேகிதா, முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க.ஜெயபவானி, மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மு.முபாரக், இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் மாவட்ட இணைப் பதிகாரிகள்ஆகியோரும் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வில் தேசிய விருதுகளுக்குரிய ஏனைய மாவட்ட செயலர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சமூக பாதுகாப்புச் சபையின் உயர்மட்ட அதிகாரிகள், மாவட்ட உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ஒ-25, 13)



## பல்கலை கற்கைநெறி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக.18

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தினால் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. முகாமைத்துவக் கற்கைகள் சிறப்பு மாணிப்பட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்பு மாணிப்பட்டம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப் பட்டம் ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க முடியும் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-25)



## கப்பலேந்தி மாதா ஆலயப் பெருவிழா

கொழும்பு, ஓக. 18

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டு கப்பலேந்தி மாதா ஆலய வருடாந்திர திருவிழா கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அடிகளார் தலைமையில் காலை 5.45 மணிக்கு குறித்த திருவிழா திருப்பலி ஆரம்பமானது.

திருவிழாவின் இறுதியில் அன்னை மரியாள் ஆலயத்திலிருந்து எடுத்துச் செல்லப் பட்டு பவனியாக கடற்கரை வீதியூடாக வலம் வந்தார், இந்தத் திருவிழா திருப்பலியில் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பக்த அடியார்கள் வருகை தந்து அன்னையைத் தரிசித்தனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கனடாவைப் பார்த்து குரைக்கும் இலங்கை

இலங்கை அரசாங்கத்துக்கு கடும் உறுத்தலாக இருந்து வரும் மேற்குலக நாடு கனடா. அந்த நாடு இறுதிக்கட்டப் போர் தொடர்பில் தெளிவான வெளிவிவகாரக் கொள்கையுடன் பயணிக்கின்றது. அதே நேரம் விடுதலைப்புலிகள் தொடர்பிலும் கனடா உட்பட மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகள் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. இவையிரண்டையும் ஒன்றுடன் ஒன்று இணைத்து தமிழ் மக்கள் குழப்பிக்கொள்ளக் கூடாது. அது ஆபத்தானது. ஆனால் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இரண்டுமே ஒன்றுதான். அதனால்தான் நாய் எங்கு கல்லடி பட்டாலும் காலைத் தூக்கும் என்பதுபோல எல்லாவற்றையும் இனவாதக் கண்ணோடே நோக்குகின்றது.

கனடாவின் பிரம்டன் நகரில் தமிழர் இனப்படுகொலைத் தூபி அமைக்கப்படவுள்ளது. இதற்கு கனடாவிலுள்ள சிங்களவர்கள் எதிர்ப்பு வெளியிட்டு போராட்டம் நடத்தியிருக்கின்றனர். அதைவிட இலங்கையிலுள்ள கனேடியத் தூதுவரை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சாடியிருக்கின்றார். இந்த இடத்தில் கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுண் தெரிவித்த கருத்துகள் முக்கியத்துவம் பெறுகின்றன.


"இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகளை நீங்கள் மறுத்தால் தாராளமாக கொழும்புக்குச் செல்லலாம். தங்கள் அன்புக்குரியவர்களுக்காகத் துக்கப்படுபவர்களைக் கொடுமைப்படுத்த இலங்கையில் உரிமைகள் வழங்கப்பட்டிருக்கலாம். ஆனால் இது இலங்கையோ கொழும்போ அல்ல. இது கனடா" என்று போராட்டத்தில் ஈடுபட்ட சிங்களவர்களுக்கு நெத்தியடிப் பதிலை வழங்கியிருக்கின்றார் மேயர் பற்றிக் பிரவுண்.

இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை கனேடிய அரசாங்கம் முதன்முறையாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்தது. அதைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இலங்கை அரசாங்கம் அதை நிராகரிப்பது மாத்திரமல்லாமல், கனடா வாக்கு அரசியலுக்காகவே இதைச் செய்வதாகவும் குற்றஞ்சுமத்தி வருகின்றது. இலங்கையில் எவ்வாறு வாக்கு அரசியலுக்காக இனவாதத்தை ஆட்சியாளர்கள் கையில் எடுக்கின்றார்களோ அதையே கனடாவும் செய்வதாகவே இலங்கை ஆட்சியாளர்களின் எண்ணமாக இருக்கின்றது.

அப்படிப்பட்ட இலங்கையின் ஆட்சியாளர்கள் தான், கனேடிய அரசாங்கம் சில தினங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட அமைப்புகள் மீதான தடை தொடர்வதாக அறிவித்தபோது அதை வரவேற்றிருக்கின்றது. இதுதான் இலங்கை அரசாங்கத்தின் வேடதாரி அரசியல்.

கனேடிய அரசாங்கம் வாக்குகளுக்காகத்தான் தமிழர்கள் மீது பச்சாதாபமாக நடந்து கொள்கின்றது அல்லது ஆதரிக்கின்றது என்றால், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையையும் அந்த நாடு நீக்கியிருக்கும். ஏனெனில் தமிழ் மக்களின் வாக்குகளை இன்னமும் அதிகமாக அந்த ஆட்சியாளர்களால் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் அந்த நாடு வாக்கு அரசியலுக்காக செயற்படவில்லை என்பதால்தான் புலிகள் மீதான தடையை நீக்கவில்லை. மாறாக இறுதிப்போரில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையை இனப்படுகொலை என்று வரையறுத்து நீதிக்கான போராட்டத்தில் இணைந்துகொண்டிருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் இந்த வேறுபாடுகளை இனியாவது புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அவர்களின் இனவாதக் கூப்பாடுகள் மேற்குலக நாடுகளில் இனிப் பலிக்காது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.




# தேர்தல் செலவு வரைமுறை: மீறினால் 3 ஆண்டுகள் தடை

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் செயற்படுத்தப்படுவதால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் சட்டதிட்டங்களை பின்பற்றி கௌரவமான முறையில் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். தேர்தல் செலவு சட்டத்தை மீறிச் செயற்பட்டால் 3 வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாமல் போகும் - இவ்வாறு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஹேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தலில் முதற்தடவையாக தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள் எந்தவகையிலும் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படாத வகையில் தங்களின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் பரப்புரை நடவடிக்கைகளில் இருந்து தவிர்த்துக்கொள்ளுமாறும் வாக்காளர்களை பணத்துக்கு வாங்குவதற்கு முயற்சிக்கவேண்டாம்.

மேலும், அதனால் வேட்பாளர்களின் செலவு வரையறுக்கப்படும் சட்டத்துக்கு அமைவாக வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் செலவுகளை மட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்தச் சட்டத்தை மீறிச் செயற்படும் வேட்பாளர்களின் பதவி இல்லாமல் போகும் நிலை இருக்கிறது- என்றார். (ச-இ)

# கனேடியத்தூதுவருக்கு அலிசப்ரிகண்டனம்

கொழும்பு, ஓக. 18

கனடாவின் பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டமைக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இலங்கை வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கான கனடாத் தூதுவரை அழைத்து தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். கனடாவின் வாக்கு வங்கி அரசியலுக்காக தொடர்ந்து பரப்பப்படும் இந்தப் பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ஓ-இ)

# வாக்குச்சீட்டு நீளும்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்குச்சீட்டு மிக நீளமானதாக இருக்கும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் சமன்ஸ்ரீ ரத்நாயக்கா தெரிவித்துள்ளார். 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆறு பேர் போட்டியிட்டனர், வாக்குச்சீட்டு ஐந்து அங்குல நீளமாக இருந்தது. 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் போட்டியிட்டனர் வாக்குச்சீட்டு 26 அங்குல நீளமாக இருந்தது. இம்முறை 39 பேர் போட்டியிடுகின்றனர் எனவே இம்முறை வாக்குச்சீட்டு 26 அங்குலத்துக்கும் அதிகமாகவே இருக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# அவுஸ்திரேலியா எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 18

ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலிய பிரஜைகளை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அவுஸ்திரேலிய அரசாங்கம் எச்சரித்துள்ளது. தேர்தலுக்கு முன்னரும், பின்னும் ஊர்வலங்கள் இடம்பெறலாம். இந்த ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகள் வெடிக்கலாம்.

என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஓ-இ)

# இரண்டரை லட்சம் பேர் 2023இல் புலம்பெயர்வு

கொழும்பு, ஓக. 18

2023ஆம் ஆண்டு பத்து இலட்சம் கடவுச்சீட்டுகள்விநியோகிக்கப்பட்டுள்ளன. அதேவேளை 2இலட்சத்து 30 ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனகுடிவரவுகட்டுப்பாட்டாளர் ஹர்ஷா இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். (ஓ-6)

## நாளை

19.08.2024

திங்கட்கிழமை - ஆவணி - 03

சுபநேரம் : 12.05 - 01.35

ராகுகாலம் : 07.35 - 09.05

## நாளொரு நல்வார்த்தை

வியர்வை சிந்தாத உன்னாலும் மை சிந்தாத பேனாவாலும் எதையும் சாதித்திட முடியாது.

- சேகுவேரா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுசாரத்துக்கு எதிரானவர்களை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரியுங்கள்

**யாழ்ப்பாணம், ஓக. 18**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சி எதுவாகவிருந்தாலும் மதுசாரம் மற்றும் சிகரெட்டுக்கு எதிராக செயற்படும் வேட்பாளர்களை கண்டறிந்து அவர்களை வெற்றிபெற வைக்கவேண்டும் என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் பொதுமக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.**

யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய பிரதிநிதிகள் இவ்வாறு கோரிக்கையை முன்வைத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சிகரெட் பாவனையால் எமது நாட்டில் வருடத்துக்கு 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். மதுசாரப் பாவனையால் நாளாந்தம் 40 பேர் உயிரிழக்கின்றனர். இவ்வாறான நிலையில் இவற்றை ஊக்குவிக்கும் கொள்கைகளை தடுப்பதற்காக செயற்படும் நபர்களை மக்கள் தமது பிரதிநிதியாக தெரிவு செய்யவேண்டும். மதுசாரம் மற்றும் சிகரெட் வரியால் தான் அரசாங்கம் நிலைநாட்டப்படுகிறது என்கிற தவறான கருத்து பலரிடம் உள்ளது. உண்மையில் சிகரெட் மற்றும் மதுசார பாவனையில் ஏற்படும் சுகாதாரதுறை மற்றும் பொருளாதார துறைக்கு ஏற்படும் செலவு அதைவிட அதிகமாகும்.

எமது நாட்டில் விற்பனையாகும் சிகரெட்டை எடுத்துக் கொண்டால் அந்த நிறுவனத்தின் 92 வீதமான பங்குகள் பிரித்தானியா மற்றும் அமெரிக்க வல்லரசு நாடுகளுக்கு சொந்தமானது. இதனால் பெருமளவு டொலர் நாட்டை விட்டு செல்கிறது. மதுசாரத்தின் விலை அதிகரிப்பால் கசிப்பு விற்பனை அதிகரிப்பதாக பரப்பப்படும் தகவல் போலியானது. போதைப்பொருள் விற்பனையாளர்கள், சிகரெட் மற்றும் மதுசார நிறுவனங்கள் என்பவற்றுடன் எந்தெந்த அரசியல்வாதிகளுக்கு தொடர்புள்ளது என்பதை மக்கள் சரியாக இனங்காண வேண்டும்.

பொதுமக்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் போதைப்பொருள் மற்றும் மதுசார சிகரெட் பாவனைக்கு உட்படாத வகையில் வாழும் சூழலை உருவாக்க சிறந்த தலைவரை தெரிவு செய்யவேண்டும் - என்றனர்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் சிரேஸ்ட நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஏ.சி.ரகீம், நிகழ்ச்சித்திட்ட அதிகாரி செல்லத்துரை நிதர்சனா, வட பகுதி இணைப்பாளர் ஆறுமுகம் கோடீஸ்வரன் ஆகியோர் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர். (ஒ-26)

# முதலாளி தாக்கி தொழிலாளி சாவு


கொழும்பு, ஓக. 18

கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குபட்ட பகுதியிலுள்ள விற்பனை நிலையம் ஒன்றில் முதலாளியால் தாக்கப்பட்டு தொழிலாளி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

46 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

# நாமலுக்கு ஆதரவு திரட்ட 120 கூட்டங்கள் ஏற்பாடு




கொழும்பு, ஓக. 18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பிரதான 120 கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கைக்கான ரஷ்யாவின் முன்னாள் தூதுவரும், ராஜபக்ச குடும்ப உறுப்பினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இதில் 40 கூட்டங்களில் மஹிந்த ராஜபக்ச கலந்து கொள்வார் எனவும், முதலாவது பரப்புரைக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தற்போதைய சூழ்நிலையில் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் உள்ளார், நாமல் ராஜபக்சவுக்கு சஜித்துடன்தான் போட்டியுள்ளது. தேர்தல் பரப்புரை ஆரம்பமான பிறகு சஜித்தையும் அவர் முந்துவார். ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ச வெற்றிபெற்றால், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதமர் வேட்பாளர் - என்றார். (ச-44)



# தமிழரசுக் கட்சியை பிரித்துக் கையாளும் இந்தியா

யாழ்ப்பாணம், ஓக. 18

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

தற்போதைய அரசியல் சூழல், மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் கரிசனைக்குரிய விவகாரங்கள் குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடலாக அது அமைந்தது என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை, இந்தியத் தூதுவர் தனித்துச் சந்தித்துக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

# கிளி.மருத்துவமனைக்கு ரூ.100 மில்லியன் நிதி

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய, மத்திய சுகாதார அமைச்சினால் கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனைக்கு சுமார் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் காணப்படும் அவசர தேவைகளை பூர்த்திசெய்வதற்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கான 500 கிலோ வாட் வலுவுடைய மின்பிறப்பாக்கி பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. (ச-26,27)

# கொழும்பில் வெள்ளம்

கொழும்பு, ஓக. 18

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை பெய்த கடும் மழை காரணமாக, கொழும்பின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஒ-இ)

# எம்மை அழிப்பதற்கு எங்களின் வாக்குகள்

## அவதானம் என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஓக. 18

எம்மவர்களைக் கொண்டே எம்மைப் பிரித்தாண்டு எமது ஒற்றுமையை சிதைத்து, எமது அபிலாஷைகளைக் குழிதோண்டிப் புதைத்து எம்மீது மீண்டும் ஒடுக்குமுறைகளை மேற்கொள்வதற்கு எம்மிடமே ஆணைபெறுவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர். நாம் விழிப்புடன் இருந்து எம்மை பலியிடத் துடிக்கும் சக்திகளைப் புறந்தள்ளவேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழர் தரப்பில் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக பேச்சுகள் நடைபெற்று அதன் பிரகாரம் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுடன் பொதுவேட்பாளரை நிறுத்துவது என்ற இலக்கை நோக்கி முன்னேறினர்.

இந்தக் காரணங்களினால் அச்சமடைந்துள்ள தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் பலமுனைகளிலும் காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றனர்.

இதனைப் புரிந்துகொள்வதினூடாக நாம் ஏன் தமிழ்ப் பொது வேட்பாளரை களமிறக்குவது என்ற முடிவை எடுத்தோம் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். தமிழ் மக்கள் நீண்டகாலமாக இலங்கை அரசியலை கண்காணித்து வருபவர்கள். அவர்களை ஏமாளிகள் என்றோ இலகுவாக ஏமாற்றிவிடலாம் என்றோ நினைப்பது மடைமைத்தனமானது என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ-இ)

# துறைமுக பொருளாதார மையம்: தனியார் துறையினருக்கு அனுமதி

கொழும்பு, ஓக. 18

கொழும்பு துறைமுக பொருளாதார அபிவிருத்தி மையத்தில் தனியார் மருத்துவமனை, தனியார் பல்கலைக் கழகம், தனியார் பாடசாலை என்பவற்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஆசிரி மருத்துவமனை 100 மில்லியன் டொலர் செலவில் அமைக்கவுள்ளது. கேற்வே சர்வதேச பாடசாலை கேற்வே பல்கலைக்கழகம் என்பன முறையே 25 மில்லியன் டொலர் செலவில் அங்கு அமைக்கப்படவுள்ளன. (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

மதிப்பிற்குரிய
**Nalin Information Technologies (Pvt) Ltd**
**வாடிக்கையாளர் கவனத்திற்கு**

எமது நிறுவனத்தின் சகல கிளைகளிலும் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்) ஆறு மாதகாலப் பகுதிக்குள் (01.01.2024 - 01.06.2024) தங்களால் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்ட கணினி மற்றும் கணினிசார் பொருட்களை (Warranty தவிர்ந்த) எதிர்வரும் 31.08.2024ஆம் திகதிக்கு முன்னராக பெற்றுக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் தங்களால் வழங்கப்பட்ட பொருட்கள் இலத்திரனியல் கழிவாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்பொருட்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு எந்த வகையிலும் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றோம். இதற்கு முற்பட்ட காலப்பகுதியில் வாடிக்கையாளரால் மீளபெற்றுக் கொள்ளப்படாத பொருட்கள் ஏற்கனவே கழிவாக எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு -
எமது நிறுவனத்தில் திருத்தவேலைக்காக பொருட்களை ஒப்படைக்கும் போது இரு வாரங்களில் பொருட்களை மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது எமது நிறுவனத்தின் நிபந்தனையாகும்.

NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North


**Email – info@nit.lk**
**Contact No - 077 542 7426**
**194/2 Parameswara Junction,**
**Palaly Road, Jaffna.**

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
A/L 2026 BATCH ஆரம்பமாகியுள்ளது.
தமிழ் - கரன் , மீடியா - பிரசாத்
வரலாறு - லக்ஷன் , அரசியல் - லக்ஷிகா
பிரான்பற்று வீதி, குபேரன் கட்டட மாடி , சங்கானை,
**Tel: 077 675 1649**
(CS/55961) J-1

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் இரண்டு அறைகளுடன் கூடிய வீடு/ அனெக்ஸ் வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
**077 566 9245**

## 12ம் ஆண்டு நினைவு நாள்

மண் உலகில் 06 • 10 • 1954



விண் உலகில் 29 • 08 • 2012

**அமரர் இளையதம்பி அருமைநாதன் (அருமை)**
**திதி : வளர்பிறை சதுர்த்தசி (18.08.2024)**

ஆலமரம் போல் எம்மைக் காத்து
அமரர் ஆகிச் சென்ற
எமது அன்பின் குல விளக்கான அப்பா!
அவனிதனில் எம்மை விட்டுப் பிரிந்து
பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டாலும்,
நீங்கள் எம் மனதை விட்டு என்றுமே நீங்கவில்லை அப்பா!
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
(CS/55951) J-1
**குடும்பத்தினர்.**

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 13 • 06 • 1981



கண் நெகிழ 25 • 08 • 1999

**செல்வி திருமகள் கனகசபை**
**திதி: சதுர்த்தசி**

ஐந்தைந்து ஆண்டுகள் இன்றோடு ஆனதம்மா
அறுமுகத்தான் மலரடிகள் தஞ்சமென நீ புகுந்து
அலங்கார தேரேறும் வேற்பெருமான் காண சென்றாய்
அல்லலுற்று அலைகின்றோம் உனதினிய முகம் தேடி
எங்கெங்கு தேடுவோம் நாம் தொலைத்த செல்வத்தை
மங்காத துயரினிலே உழல்கின்றோம் அனுதினமும்.

தற்காலிக முகவரி:
125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி:
மீசாலை வடக்கு, மீசாலை.

உன் பிரிவால் வாடும்
**பெற்றோர், சகோதரர்கள்.**
(CS/55963) J-1

## Florance Nursing Home Care Service Centre
## புளோரன்ஸ் நேர்சிங் ஹோம்கேர் சர்வீஸ் சென்டர்



உங்கள் தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக வீட்டில் வைத்து பராமரிக்க முடியாதவர்கள் பாரிசவாதமுடையவர்கள் மற்றும் நீண்டகால படுக்கை நோயாளிகள் அனைவரையும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மிக பாதுகாப்பாகவும் நாங்கள் பார்த்துக்கொள்வோம்.

- உணவு முறைகள் மிக ஆரோக்கியமாக வழங்கப்படும்
- முதியோர்களின் மனநிலையறிந்து / உடல் நிலையறிந்து பொழுது போக்கான விடயங்கள் / உடற்பயிற்சி / பிசியோ தெரபி / மன அமைதிக்கான தியானங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெறும்.
- முதியோர்களின் ஆரோக்கியம் கருதி மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் மாதாந்த கிளினிக் மருத்துவ சேவைகள் என்பன வழங்கப்படும்
- அவர்களின் வீடுகளில் இருப்பதுபோலவே மகிழ்சியாகவும் அன்பாகவும் எமது தாதியர்களின் மேற்பார்வையிலும் உதவித் தாதியர்களின் பராமரிப்பிலும் பாது காக்கப்படுவார்கள்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் சிறந்த நிறைவான சேவையை வழங்குகின்றோம்**

**அனுமதிகளை பெற்றுக்கொள்ள**
**077 718 6438 / 077 482 4473**
**முகவரி : மருதனார்மடம், உடுவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடத்தல்

நைஜீரியாவில் 20 மருத்துவர்கள் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். மருத்துவர்களைப் பணயக் கைதிகளாக்கும் நோக்கில் போகோஹறம் அமைப்பால், இந்தக் கடத்தல் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ம)


## வேலையாட்கள் தேவை

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான
RG Brothers(Pvt)Ltd இற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- **கணக்கு நிர்வாகி** - Accounts Executive
- **இயந்திர இயக்குநர்** - Machine Operator
- **மேற்பார்வையாளர்** - Supervisor
- **கூலி தொழிலாளி** - Wage Laborers

வயதெல்லை 20 - 30. ஆண்கள் மட்டும். தங்குமிட வசதி வழங்கப்படும்.
RG Brothers
No. 228 Canel Road,Elakand Hendala, Wattala.
076 929 2323, 077 434 6367
(CS/55925) J-1

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதி
நான்காம் ஒழுங்கையில்
புதிதாக அமைக்கப்பட்ட ஆடம்பர
வீடு உட்பட (AC) இரண்டு
வீடுகள் மாத/நிரந்தர
வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 983 6719, 077 517 7183
(CS/55939) J-1

## மணமகன் தேவை

2000, இந்து, பூராடம், CIVIL ENGINEER,
பூர்வீகம்- கரவெட்டி ,வதியுமிடம்- தெல்லிப்பளை
மணமகள் பதிவு இல: 10321.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
அழையுங்கள் 076 664 9401


## தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து இன்று கூட்டம்!

முல்லைத்தீவு, ஓக. 18

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரித்து முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் இன்று பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசியக் கட்சிகளும், பொது அமைப்புகளும் இணைந்து பா.அரியநேத்திரனைத் தமிழர் தரப்பின் பொதுவேட்பாளராக நிறுத்தியுள்ளன. அவரை ஆதரித்தே இன்றைய கூட்டம் இடம்பெறவுள்ளது. (ம-66)


## மணமகள் தேவை

1991, இந்து, திருவோணம், DOCTOR,
பூர்வீகம்- யாழ்ப்பாணம் ,வதியுமிடம்- கனடா
மணமகன் பதிவு இல: 10770.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
அழையுங்கள் 076 664 9401

## காணவில்லை



றேஜிராஜ்
ஆனைக்கோட்டையைச்
சேர்ந்த 31 வயதுடைய
றேஜிராஜ் என்பவரைக்
கடந்த ஒரு மாதமாக
காணவில்லை.
இவர் மனநலம்
பாதிக்கப்பட்டவர்.
இவரைக் கண்டவர்கள்
தொடர்பு கொள்ளவும்.
074 177 8056
074 242 8294

## தேவை

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல
நர்சிங்ஹோம் நிறுவனத்திற்கு
தாதிய உதவியாளராக பணிபுரிய
ஆண். பெண் இருபாலாரும் தேவை.
யாழ் மற்றும் ஏனைய பிரதேசங்களில்
இருந்தும் விண்ணப்பிக்கலாம்.
வயது - 18 முதல் 55 வரை. தொடர்புகளுக்கு:-
077 700 6803, 021 222 1922
(CS/55943) J-1

## மணமகன் தேவை

1992, இந்து, புனர்பூசம், TEACHER,
பூர்வீகம்- நெடுந்தீவு ,வதியுமிடம்- கிளிநொச்சி
மணமகள் பதிவு இல: 10670.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
அழையுங்கள் 076 664 9401

## மணமகள் தேவை

1993, இந்து, றோஹினி, ENGINEER,
பூர்வீகம்- உடுவில் ,வதியுமிடம்- கொழும்பு
மணமகன் பதிவு இல: 10893.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
www.EQMarriageService.com
இணையவழி திருமணசேவை
கொழும்பு 04
அழையுங்கள் 076 664 9401




ரோயல் மருத்துவமனை நடத்தும்
இலவச செயன்முறைக் கருத்தரிப்பு
ஆலோசனை முகாம்

AUGUST 24 வவுனியா
AUGUST 25 யாழ்ப்பாணம்

உலகப் புகழ்பெற்ற செயன்முறைக் கருத்தரிப்பு
சிகிச்சை நிபுணரான பிரசாந்த் மருத்துவமனையின்
தலைமை மருத்துவரை
உங்கள் மண்ணிலேயே சந்தித்து,
உங்கள் கவலைக்குத் தீர்வு
காண அரியதோர் வாய்ப்பு!



பிரசாந்த் மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை, 62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு - 06.
அழையுங்கள்: 0754000012, 0777215588


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 09 . 1937

மறைவு
16 . 08 . 2024

## கிருஷ்ணசாமி பவானியம்மா

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிட கவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி பவானிய அவர்கள் நேற்றுமுன்தினம் (16.08.2024) வெள்ளிக்கிழமை இறை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம் - மாணிக்கம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந் யா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும்,கிருபானந்தா (ஓ பெற்ற ஆசிரியர்), கிருபானந்தி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயா தங்கராணி (ஆசிரியர்), ஸ்ரீகரன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமிய ம், அபிராமி, ஆரூரன், பிரணவி, வைஷ்ணவி ஆகியோரின் அன்பு பேர்த் யும், காலஞ்சென்ற இலங்கைநாதன் (ஓய்வுநிலை அதிபர்), அன்னபூரணி, ஞானசௌந்தரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மீனாட்சி, சிதம்பரநாதன் (ஓய்வுநிலை பொலிஸ் அத்தியட்சகர்), சிவநாதன், பராசக்தி, கனகராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நயினை கி.கிருபானந்தா
077 423 8064

521/9 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/1150) J-1

# மரண அறிவித்தல்



## இராஜதுரை இரகுபதிராஜா (சுபாஷ்)

புலோலி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் ,கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட இராஜதுரை இரகுபதிராஜா அவர்கள் நேற்று முன்தினம் (16.08.2024) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜதுரை - ஞானாம்பிகை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற யோகேஸ்வரி (கிளி) அவர்களின் அன்புச் கணவரும், காலஞ்சென்றவர்களான ஸ்ரீரங்கநாதன் (நேரு), சுதந்திராதேவி மற்றும் சுசீலாதேவி, அருட்செல்வம் (செல்வம் - UK), ஜெயந்தி (கிளி - பிரான்ஸ்) அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் இறுதிக்கிரியைகளைத் தொடர்ந்து கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 898 0165
077 033 0302

12,ஆடியபாதம் வீதி,
கொக்குவில்

(CS/55954) J-1

## இணுவிலில் வசந்தவிழா போட்டிகள்

இணுவைத் தமிழ்ச் சங்கத்தினரால் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு பிரதேச மட்ட அறநெறிப் போட்டிகள், தமிழ்த் தினப் போட்டிகள் காரணமாகப் பிற்போடப்பட்ட மாணவர்களுக்கான வசந்த விழாப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமையும், நாளை திங்கட்கிழமையும் யாழ். இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன. இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் சித்திரம், கட்டுரை, தனிநடிப்பு ஆகிய போட்டிகள் ஆரம்பமாகி நடைபெறும். நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் தனி இசை, நடனம், பேச்சு ஆகிய போட்டிகள் ஆரம்பமாகி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

# மரண அறிவித்தல்



பிறப்பு
13 . 04 . 1946

இறப்பு
16 . 08 . 2024

## திருமதி சின்னத்தம்பி புவனேஸ்வரி

யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கு, கல்லாகத்தினை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி புவனேஸ்வரி 16.08.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரகத்தி சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சந்திரகுமார் (மனோ) மற்றும் பார்த்தீபன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தி (ஜேர்மன்), உமாதேவி (ஆயுர்வேத வைத்தியர் - யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, முத்துக்குமார், மாசிலாமணி, அழகரெத்தினம், உருத்திரசிங்கம், செல்வராசா, சுந்தரலிங்கம் மற்றும் மகாலிங்கம், ஜெயக்குமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜேர்மனில் வசிக்கும் அனுசா, இளந்திரையன், மயூரன், பொலினா, தினேஸ், மிகுணன், ஹேமஹர்ணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜேர்மனியில் வசிக்கும் சங்கீதன், சஞ்சீவன், மனோ ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கைதடி கல்லாகத்தில் அமைந்துள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.பார்த்தீபன்
கல்லாகம்,
கைதடி மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 523 5566

(CS/55956) N-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
10 . 03 . 1936

மறைவு
15 . 08 . 2024

## வள்ளியம்மை சோமசுந்தரம்

பங்களா வீதி, மீசாலையைச் சேர்ந்த வள்ளியம்மை சோமசுந்தரம் அவர்கள் கடந்த 15.08.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தங்கம்மா தம்பதியின் மகளும் , தம்பு - பாருப்பிள்ளை தம்பதியின் மருமகளும், சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், சுவர்ணா (இலங்கை) , கிருஸ்யந்தன் (லண்டன்) , விவேகானந்தன் ( கனடா) , சிவநேசன் (மேலதிக பணிப்பாளர், பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிளிநொச்சி, இலங்கை) , சுகல்யா (இலங்கை), சுகுணா (கனடா), சுகிர்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிக்குமார் (இலங்கை), கெங்காதேவி (லண்டன் ) , வளர்மதி (கனடா), வனிதா (இலங்கை), யசோதரன் (KSY - இலங்கை), காலஞ்சென்ற அருள் (கனடா), மற்றும் இராஜேந்திரன் (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோன், மயூரி, நிசாந்தன், கிருஷாணி, கிருஜா, அர்ச்சனா, ஆராதனா, யதுசன், பிரணவி, இராகவி, ஸ்ரீகவி , அர்ச்சுன் , அஸ்மிதா, ரிசிகா, அருண், சுலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆர்யாவின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2024) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு :
சுவர்ணா(இலங்கை) - 0212270639 ,0772937200
சிவநேசன் ( இலங்கை ) - 0772357915
விவேகானந்தன் ( கனடா) - 001647-533-9568
யசோதரன் (KSY - இலங்கை) - 0775474188
இராஜேந்திரன் (கனடா) - 01647-608-7990.
கிருஸ்யந்தன்(லண்டன் ) - 044-208422-8002

(CS/42938) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Samuel & Co. யாழ்ப்பாணத்தில் புதிய கிளை திறப்பு

Samuel & Co. (பட்டய கணக்காளர்கள்) 2024 ஒகஸ்ட் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தனது புதிய கிளையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தது. இந்த விரிவாக்கம் உள்ளூர் வர்த்தகங்களின் விரிவான உத்தரவாதம், வரி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு அமைக்கப்பட்ட நிறுவனத்தின் மூலோபாய வளர்ச்சியின் மைல்கல்லாக அமைகிறது.





இந்தப் புதிய கிளை இல. 95, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்திருப்பதோடு இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக S.Saverimuttu & Co. பங்குதாரர் திரு. டீ. பேரின்பராஜா (FCA), அருட் தந்தை ஜே.ஜே. கமலநாதன், சிவஸ்ரீ பீ. மனோஹரா குருக்கள், சங்கைக்குரிய மீகஹஜன்துரே ஸ்ரீவிமல தேரர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதில் கௌரவ அதிதிகளாக பங்கேற்ற AAT Sri Lanka வின் சபை உறுப்பினர் திரு. துஷார காரியவசம் (FCA) மற்றும் S.Saverimuttu & Co. பங்குதாரர் திரு. அன்தனி மணிவண்ணன் (ACA) ஆகியோருடன் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் நிர்வாக பணியாளர்கள், உள்ளூர் வர்த்தக அதிபர்கள், மற்றும் Samuel & Co. குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய கிளை திறக்கப்பட்டது மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக சமூகத்திற்கு திறம்பட சேவைகளை வழங்குவதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளதை இட்டு முகாமைத்துவ பங்காளரான சாமுவேல் சீ. காந்த் மகிழ்ச்சியை வெளியிட்டார்.

உள்ளூர் சமூகத்தில் வர்த்தக வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் தனது நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு, உயர் தொழில்முறை தரங்களை பேணுதல் மற்றும் ஒழுக்க நெறிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்வதாகவே Samuel & Co. நிறுவனத்தின் இந்தப் புதிய அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

சாமுவேல் சீ. காந்த்
(ACA, CPA, MCPM, MAAT)
முகாமைத்துவ பங்காளர்

ஈழத்து இளைஞர்களால்

# 'குமரி கண்ட குமரன்' பாடல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 18

தமிழ்க்கடவுள் முருகனின் வரலாறையும் தற்கால நிகழ்வுகளையும் இணைந்தவாறு 'குமரி கண்ட குமரன்' எனும் பாடல் ஈழத்து இளைஞர்களால் வெளியீடு செய்யப்பட்டு அனைவரது கவனத்தையும் இணையத்தில் ஈர்த்துள்ளது.

'குமரி கண்ட குமரன்' என்ற பாடல், தமிழரின் தொன்மையான நிலைமையான குமரி கண்டம் நிலவிய காலத்துக்குத் திரும்பி, அவ்வழியிலே பயணிக்கச் செய்கிறது. சமுத்திரத்தில் மறைந்ததாகக் கூறப்படும் குமரி கண்டத்தின் கதை மற்றும் அதில் வாழ்ந்த தமிழர்களின் போராட்டம், தைரியம் மற்றும் முருகன் எனும் தெய்வத்தின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை ஆகியவை பாடலில் புலப்படுகின்றன.

பாடல் வரிகளை கமல் அபரன் மற்றும் சாந்தகுமார் எழுதியுள்ளனர். பூவன் மதீசனின் கருவில் அவரே இசையமைத்துள்ள இந்தப் பாடல், கோகுலன் சாந்தன் சத்தியன் உள்ளிட்ட பல்வேறு குரல் கலைஞர்கள் இணைந்து பாடியதன் மூலம், ஈழத்தின் இசை வடிவத்தை பிரதிபலிக்கின்றது. இசையின் மேலதிக நுட்பங்களையும் ஒளி சமப்படுத்தல்களையும் இசை மேம்படுத்தல்களையும் சாயீதர்ஷன் மேற்கொண்டுள்ளார். ராஜ் சிவராஜ் இயக்கிய இந்த வீடியோ, தமிழ் கலாசாரத்தின் அழகும் ஆழமும் கொண்ட காட்சிப்பொழிவாக உருவாக்கப்பட்டுள்ளது. ஏ. கே. கமலின் ஒளிப்பதிவு, அருணின் படத்தொகுப்பு மற்றும் குணரத்தினம் வாசீகரன், தாரு மற்றும் சத்யஜித்ஆகியோரின் ஒத்துழைப்புடன், குமரனின் கதையை உயிரோட்டமாக்குகின்றது.

வி.எஸ். சிந்துவின் கலை இயக்கமும், முகமது நவீத் ஒழுங்கமைத்த நடனமும், தமிழர் மரபுகளையும், நம் மண்ணுக்கான காலமற்ற இணைப்பையும் பிரமிக்க வைக்கின்றன. (ஒ-இ)

# ஜனாதிபதித் தேர்தல் பணி; பின்பற்றும் விதிமுறைகள்

## தேர்தல்கள் ஆணைக்குழு வெளியீடு

கொழும்பு, ஓக. 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் செய்யக்கூடாத நடவடிக்கைகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி வேட்பாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. இதுதொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவிக்கையில்,

**பாரபட்சம் காட்டுதல்**

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து வாக்குப்பதிவு முடியும் வரை, ஒரு வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை அதிகரிப்பதற்காக மற்றொரு வேட்பாளருக்கு பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் பரப்புரைகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் பிற பொருள்களை காட்சிப்படுத்தவோ அல்லது விநியோகிக்கவோகூடாது.

**விளம்பர காட்சிப்படுத்தல்**

தேர்தல் பரப்புரை விளம்பரங்கள் அல்லது பிற விளம்பரப் புகைப்படங்கள் அல்லது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சித்திர வாக்குச் சின்னங்கள், கொடிகள் மற்றும் பதாகைகள் ஆகியவை குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மட்டுமே கூட்டத்தின் ஒரு நாளில் நடைபெறும் இடத்துக்கு அருகில் அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட அறிவிக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் விளம்பரப்படுத்தப்படலாம்.

**இலஞ்சம் அல்லது ஊழல் நடைமுறைகள் மற்றும் செல்வாக்கு**

வேட்பாளருக்கு வாக்களிக்க ஏதாவது கொடுப்பது இலஞ்சமாகக் கருதப்படுகிறது. அதன்படி, வாக்குகளைப் பெறுவதற்காக விருந்துபசாரம் செய்தல், இலஞ்சம் வழங்குதல், தேவையற்ற அழுத்தங்கள் வழங்குதல், மோசடி செயல்களாகக் கருதப்படும்.

**பொதுச்சொத்தைப் பயன்படுத்துதல்**

தேர்தல் காலத்தில், அரசாங்க அமைச்சுகள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், சபைகள் போன்ற அரசியலமைப்பு நிறுவனங்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன.

மேலும், அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரியும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வாக்களிப்பைத் தவிர வேறு எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது.

இவ்வாறான சட்டவிரோத பேரணிகளை நடத்தும்போது அதனை வீடியோவாகப் பதிவு செய்து நீதிமன்றில் வழக்குகளை பதிவு செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கலாம் - என்றார். (ச-இ)




18.08.2024
ஆவணித்திங்களிலே
வெள்ளி விழா காண்கின்றாள்
மகாசில்க்ஸ்

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது
அகிலம் வியக்கும் பெரும்பணிக்கு
வித்திட்ட முதல் வருடம்
மங்கல நாமம் கொண்டு
மகாலட்சுமி அருளோடு உதித்தாள்
மகாசில்க்காய் அகிலத்தில் அன்று.

சாவல்கள் நிறைந்த வர்த்தகத்துறையில்
சரித்திரம் படைக்க
வர்த்தக பெரு நகரமாம் யாழ்ப்பாண கோட்டையிலே
ஆயிரம் ஆயிரம் சீனப் பெருஞ்சுவர்களுக்கு மத்தியில்
சிறு துரும்பாய் அடியெடுத்து வைத்து
நிகழ்காலமதில் பெரும் சுவர்களையே
- விஞ்சி நிற்கும் அளவிற்கு
சொல் நாணயத்தால் களைப்புறா உழைப்பால்
- பணியாற்றி
மக்கள் மனம் வென்ற சீரான விலையால்
கவுஸ் ஒவ் செலெக்ஷனாய் பியூட்டி சில்க்காய்
ரொப் சில்க்காய் கிளைகள் பரப்பி நான்முகன்
பிரமனாய் நானிலத்தில் நிலைகொண்டாள்.

இன்னும் பலநூற்றாண்டு தொடரப்போகும் மகத்தான
பணிக்கு தந்தை வழி தொட்ட இளவலின் வருகை
பலமூட்டும் பாதையை சீராய் அமைக்கும் ஐயம் இல்லை.

வாழ்த்துகிறோம் வாஞ்சையோடு
வெல்லம் இட்ட இனித்திடும் நாவோடு
பூரிப்பு நிறைந்த நல் மனத்தோடு
வாழிய வாழிய வாழியவே
நல்லைக்கந்தன் அருளோடு
குலசாமி ஆசியோடு வாழ்கவே
பல்லாண்டு வாழ்கவே

25 ANNIVERSARY

18.08.2024
முதல் 18.09.2024
வரை கொள்வனவு
செய்யப்படும் பொருட்களுக்கு
30 % விசேட
விலைக்கழிவு
வழங்கப்படும் என்பதை
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
அறியத் தருகின்றோம்

மகா சில்க்ஸ்
பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
021 222 7359

கவுஸ் ஒவ் செலெக்ஷன்
22, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களை பாதுகாக்கவே ரணில் ஜனாதிபதியானார்

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஓக. 18**

**ராஜபக்ச குடும்பத்தின் மீது முன்வைக்கப்பட்ட ஊழல், மோசடிக் குற்றங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகத்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக்கப்பட்டார் என்று ஐக்கிய மக்கள் கூட்டணி குற்றஞ்சாட்டியுள்ளது.**

சஜித்துக்கு ஆதரவாக, களுத்துறையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரகலய போராட்டத்தின் பின்னர் ராஜபக்சக்கள் ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், அதற்கு முன்னர் சஜித்துக்கு அழைப்பு விடுத்தனர். சர்வதேச எதிர்ப்புகளையும், தமது குறைகளை இருட்டடிப்புச் செய்வதற்குமே அவர்கள் சஜித்தை பொறுப்பேற்க வருமாறு அழைத்தனர். சஜித்தை தோல்வியடைந்தவராகக் காண்பிக்கவும், அவருடைய அரசியலை நாசமாக்கவுமே இவ்வாறு முயற்சிக்கப்பட்டது. அதை நாங்கள் நன்றாகவே அறிந்திருந்தோம். அதனால், 'இந்தத் தருணத்தில் நாட்டின் தலைமைப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம்' என நாங்கள் கூறினோம். ராஜபக்ச குடும்பத்தின் மீதுள்ள ஊழல், மோசடிக் குற்றங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேதான் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆக்கினார்கள். ஆனால் இறுதியில் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனக் கட்சியையும் நாசமாக்கி விட்டார்.

பொதுஜன பெரமுனக் கட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே மஹிந்த ராஜபக்ச தன் மகனை ஜனாதிபதிப் போட்டியில் களமிறக்கியுள்ளார். பொதுஜன பெரமுனக் கட்சியைப் பாதுகாப்பதற்கு மஹிந்தவுக்கு தற்போது வேறு தெரிவுகள் இல்லை.

ஜே.ஆர். ஜெயவர்த்தன அனைத்து நீதிபதிகளையும் வீட்டுக்கு அனுப்பினார். ரணில் விக்கிரமசிங்க இன்று நீதிபதிகள் வழங்கும் தீர்ப்புகளை மீறிச் செயற்படுகிறார். சட்டத்தரணிகளுக்கும் நீதிமன்றங்களுக்கும் இடையே சண்டையை உண்டு பண்ணவே ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க பொலிஸ்மா அதிபரை தேர்ந்தெடுத்தது பாதுகாப்பு அமைச்சரின் தேவையின் நிமித்தமே ஆகும். தேசபந்து தென்னக்கோனைத் தேர்ந்தெடுத்தது அரசாங்கத்தின் செயலற்ற அரசியலைக் கொண்டு செல்வதற்கே ஆகும். ஆனால் அவையனைத்தும் இன்று தோல்வியடைந்துள்ளன. ஆகவே ஜனாதிபதி பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை உடனடியாக நியமிக்கவேண்டும் - என்றார். (அ-ம)

இரண்டாம் ஆண்டு சிரார்த்ததின ஆத்மசாந்திப் பிரார்த்தனை



கடந்த 12.08.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

கோபாலப்பிள்ளை கதிர்காமநாதன் (K.K.நாதன்)

(ஓய்வு நிலை தபாலக உத்தியோகத்தர்)

அவர்களின் இரண்டாம் ஆண்டு சிரார்த்ததின சாந்திப் பிரார்த்தனை நாளை (19.08.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

15/2 மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

நன்றி
குடும்பத்தினர்.



உடுவில் பிரதேச செயலகத்தின் சமுர்த்திப் பிரிவால் போதைப் பொருள் மற்றும் புகைத்தல் எதிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு யாழ். ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர், முகாமையாளர், வளவாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி)




## விஞ்ஞானப் போட்டியில் முழங்காவில் ம.வி. சாதனை

கிளிநொச்சி, ஓக.18

வலய மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்கள் வெற்றியீட்டியுள்ளனர். தரம் -6 மாணவி சி. பிரணவி 2 ஆம் இடத்தையும், தரம் -7 மாணவி ஸ்ரீ. வர்ஷனா 3 ஆம் இடத்தையும், தரம் -8 மாணவி மோ. ரக்சனா முதலாம் இடத்தையும், தரம் -9 மாணவி பா.விதுனா 3 ஆம் இடத்தையும், தரம் -12 மாணவி பா. தனுசாலினி முதலாம் இடத்தையும் பெற்று பாட சாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (ச-25,159)



'வேலும்மயிலும்' அறக்கட்டளையின் எட்டாம் ஆண்டு விழா நிறைவை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச செயலக பிரதேசத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தில் நலிவுற்ற 50 குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-108)





வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய சப்பரத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை அதிகளவான பக்தர்கள் சூழ சிறப்புற இடம்பெற்றது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ் நகரை அண்மித்த பகுதியில் 1500 - 2000 Sq கொண்ட களஞ்சிய சாலை (Store) வாடகை அல்லது குத்தகைக்குத் தேவை. (கனரகவாகனம் நிறுத்தக்கூடிய வசதி இருந்தால் சிறப்பு) (CS/55958)

தொடர்பு:- 076 690 8987

## வீட்டுடனான காணி விற்பனைக்கு

கொழும்பு 06, வெள்ளவத்தையில் காலி வீதிக்கு அருகாமையில் 21.40 பேர்ச்சஸ் பரப்புடைய வீட்டுடனான காணி உடனடி விற்பனைக்கு உண்டு. அடுக்குமாடிகள் கட்டுவதற்கு உகந்தது. விலை ஒரு பேர்ச்சஸிற்கு 12 மில்லியன் (negotiable) எதிர்பார்க்கப்படுகிறது. நேர்மையான தரகர்கள் வரவேற்கத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 076 786 6268

## STUDY IN UK

- Any Courses Available
- 2 Years PSW
- With or Without IELTS
- Scholarships Available

Get More Details
+94769 790 622
+94705 204 604

HYBRID VISA CENTRE
No: 6 1\1, 37th Lane, Wellawatta, Colombo - 06, Sri Lanka
+94112 362 925 hybridcamous@gmail.com
www.hybridcampus.lk

## STUDY IN POLAND

- Any Courses Available
- 1 Year PSW
- No IELTS
- Internship Programs
- Cheap Living Cost & Course Fees

Get More Details
+94769 790 622
+94705 204 604

HYBRID VISA CENTRE
No: 6 1\1, 37th Lane, Wellawatta, Colombo - 06, Sri Lanka
+94112 362 925 hybridcamous@gmail.com
www.hybridcampus.lk

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு சமீபமாக பாண்டியந்தாழ்வில் 1 பரப்புக் காணி. வீடு கிணற்றுடன் 3 Rooms, Kitchen, 2 Bathrooms, Living, Garden, Parking வசதிகளுடனான புதிய வீடு (Fully Tiled) உடனடி விற்பனைக்கு உண்டு. Clear Deed. (CR/42941) J-1

077 281 7129

## வீடு விற்பனைக்கு

கோவில் வீதியில் 3/4 பரப்பு வீட்டுடன் கூடிய காணி (மேல்வீடு) விற்பனைக்கு உண்டு.

தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்

தொடர்பு: 077 812 7150, 077 853 5625

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை.
A/L 2026 BATCH ஆரம்பமாகியுள்ளது.
தமிழ் - கரன் , மீடியா - பிரசாத்
வரலாறு - லக்ஷன் , அரசியல் - லக்ஷிகா
பிரான்பற்று வீதி, குபேரன் கட்டட மாடி, சங்கானை, (CS/55961) J-1

Tel: 077 675 1649

## மணமகள் தேவை

1993 யாழ். இந்து (V) கொழும்பில் வங்கி ஒன்றில் உயர்பதவி வகிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (CS/28639) J-1

074 069 8969

## விற்பனைக்கு

மாவிட்டபுரம்

மாவிட்டபுரம் வீமன்காமம் அருகில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (CS/55964) J-1

தொடர்புகளுக்கு :- விமல் 077 734 8766

# ஆன்மீக அருளுரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் அடுத்த மாதம் 2ஆம் திகதி தீர்த் தோற்சவம் வரையான காலப் பகுதியில் தினமும் இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆன்மீக அருளுரை நிகழ்த்தவுள்ளார். மஞ்சத் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை 'திருநல்லூர்' எனும் தலைப்பில் அவரின் அருளுரை இடம்பெறவுள்ளது. (ம-25-66)

## விற்பனைக்கு

யாழ் நீதி மன்றத்திற்கு முன்பாக 2 பரப்பும் 11 குழியும் காணி உடன் விற்பனைக்கு

தொடர்பு: 076 579 9693

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com (CS/55336) J-1

## வீடு வாடகைக்கு

இல: 150, நாவலர் வீதி, ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி இல் அமைந்துள்ள (100 m from A9 வீதி) மேல் மாடி வீடு, வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கும் ஏற்றது.

தொடர்புகளுக்கு: 077 955 9442

## விற்பனைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 3 கடைகளும், யாழ் ஸ்ரான்லி வீதியில் 3 கடைகளும் விற்பனைக்குண்டு (CS 1162) V-1

தொடர்பு: 077 723 2535

## விற்பனைக்கு/தேவை

அரைக்கும் ஆலைக்கு தேவையான இயந்திரங்கள், தேங்காய் எண்ணை ஊற்றும் இயந்திரங்கள் (03) விற்பனைக்கு. மேலும் பெண் ஊழியர்கள் வேலைக்கு தேவை.
தொடர்பு பிருந்தா மில் 184 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

தொடர்பு: 077 174 6101

## விசா ஆலோசனை சேவை

- எதிர்வரும் 22 ம் திகதி பிரான்ஸிலிருந்து பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் வருகை தருவதனால் யாழில் வைத்து Sport addmission வழங்கப்படும்.
- சகல நாடுகளுக்குமான Visit visa, Work visa, Student visa family visa, Imigration visa, எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும். France, Italy vist visa 2 கிழமைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.
  - ✓ ஜேர்மனி. UK வேர்க் போமிட் 6 கிழமைகளில் பயணம்.
  - ✓ சகல தூதுவராலயங்களுக்குரிய ஆவணங்களும் சரி செய்து தரப்படும்.
  - ✓ ஞாயிற்றுக்கிழமை பதிவு செய்வோருக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 604 0373

## வெள்ளவத்தையில் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்கு

மேலும் கீழுமாக 5 படுக்கை அறைகள், 4 குளியலறைகள், 2 சமையல் அறைகள், 2 சாப்பாட்டு அறைகள், 2 பல்கனிகள் (முன்னும், பின்னும்), காலி வீதியில் இருந்து சுமார் 3 நிமிட நடை தூரத்தில் Land Side இல் 8 பேர்ச்சில் அமைந்துள்ளது. (Delmon Hospital, Arpico மற்றும் Market) க்கு அருகாமையில் வாகனம் (கார் அல்லது வேன் அல்லது மோட்டார் சைக்கிள் 4 தரிப்பிட வசதிகள் உண்டு. (AD/CS 62944) V-1

பார்வையிடும் நேரம் ஞாயிறு முதல் மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணி வரைக்கும்

Tel: 076 457 3909 (N.K.நாதன்)
077 228 6923 (V.T.Rajendran)

## த.வெ.கழக கட்சிக்கொடி

நடிகர் விஜய் ஆரம்பித்துள்ள தமிழக வெற்றிக்கழகத்தின் கட்சிக்கொடி எதிர்வரும் 22ஆம் திகதி அறிமுகம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி கட்சியின் முதலாவது மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 07 . 1938



மறைவு 17 . 08 . 2024

## சரஸ்வதி பொன்னையா

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி பொன்னையா நேற்று (17.08.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம், லீலாவதி மற்றும் பஞ்சரெட்ணம், அருமைநாயகம், செல்வரெட்ணம் (France), காலஞ்சென்ற விஜயரெட்ணம் மற்றும் குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மகேஸ்வரி (London), மற்றும் சபாரட்ணம் (London) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible]

534, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (CS/1160) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதப்...

ஜே.வி.பி.யின் முதலாவது தேர்தல் பரப்புரைக்கூட்டம், தங்காலையில் நேற்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'நாடு என்ற ரீதியில் முன்னோக்கிச் செல்வதற்கு தேசிய மட்டத்திலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தேசிய மக்கள் சக்தி தொடர்பாக இன்று பலர் வீண்குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். அவ்வாறான குற்றச்சாட்டுகள் எதற்காக முன்வைக்கப்படுகின்றன என்பதை மக்கள் அறிவார்கள்.

நாட்டில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் பலர் அரசியல் பதவிகள் மற்றும் தனிப்பட்ட இலாபம் கருதி கட்சித்தாவல்களில் ஈடுபட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவாக இருந்தாலும் அல்லது வேறு எந்த வேட்பாளர்களாக இருந்தாலும் எத்தகையை கூட்டணிகளை அமைத்தாலும் நாட்டு மக்களை இம்முறை ஏமாற்றமுடியாது. மக்கள் இன்று தேசிய மக்கள் சக்தியுடன் உள்ளனர் என்பது வெளிப்படையானது - என்றார். (அ-ம)

## ஊழலும்...

தெரிவித்ததாவது:-

இன்று அரசாங்கத்தில் பல தரப்பினர் ஒன்றிணைந்துள்ளனர். அதில் வைன் ஸ்ரோர்ஸ், மதுபான அனுமதிப்பத்திரம் போன்ற வரப்பிரசாதங்களுக்கு அவர்களை பலியெடுத்துள்ளனர். நான் ஜனாதிபதியான பின்னர் அவ்வாறு மோசடியாகவும் இலஞ்சமாகவும் வழங்கப்பட்ட அனைத்து அனுமதிப் பத்திரங்களையும் இரத்துச் செய்வேன். அரசியல் இலஞ்சத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் சட்டத்தின்முன் பதிலளிக்க வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான தவறுகளைச் செய்யாமல் சிந்தித்து செயற்படுமாறு வேண்டிக் கொள்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தியுடனும், ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடனும் இணைந்து கொண்டிருக்கிற ஒவ்வொருவரும் பணத்துக்காகவும் ஊழலுக்காகவும் மோசடிகளுக்காகவும் இணையவில்லை. சிறந்த கொள்கை திட்டத்து டன் இணைந்து கொண்டிருக்கின்றனர். ஊழல் மிக்க திருட்டுத்தனமான அரசியலை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

இன்று சலுகைகளையும், வரப்பிரசாதங்களையும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தில் உள்ளவர்கள் மாத்திரமே அனுபவிக்கின்றனர். ஆனால், 220 இலட்சம் மக்களும் அநாதைகளாக கைவிடப்பட்டிருக்கின்றனர். தேர்தல் காலங்களில் பொய் வாக்குறுதிகளை வழங்கியதைப்போன்று இந்த முறையும் மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ஆனால், மக்கள் ஏமாறுவதற்குத் தயாராக இல்லை - என்றார். (அ-ம)

## நான்...

இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சிகளை உடைப்பதற்காக நாம் இன்று ஒன்று கூடவில்லை. கட்சிகள் ஒன்றுகூடி நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வந்துள்ளோம். அதனால்தான் கட்சி பேதமின்றி சுயாதீனமாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறேன்.

மற்றைய தலைவர்கள் ஓடிப்போன வேளையில், முடியும் என்று நாட்டை மீட்க வந்தவர்கள் எம்மோடு உள்ளனர். அதனால் எனது அணியில் அனைவரும் ஒன்றுபட்டு முன்னோக்கிச் சென்று எதிர்காலத்தைப் பாதுகாப்போம். என்னுடையதோ பிரதமருடையதோ எதிர்காலம் இங்கு பாதுகாக்கப்படாது. மக்களின் எதிர்காலத்துக்காகவே நாம் பாடுபடுகின்றோம்.

கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. அன்று நாட்டில் மின்சாரம் இருக்கவில்லை, இருளில் இருந்தோம். எரிபொருள் இருக்கவில்லை, நடந்து சென்றோம். எரிவாயு இருக்கவில்லை, சிலிண்டர் மட்டுமே இருந்தது, அதை நாம் விற்றோம். மருந்து இருக்கவில்லை, மக்கள் வீதிகளில் உயிரிழந்தனர். ஹொட்டல்கள் மூடப்பட்டன, தொழிற்சாலைகள் முடங்கின. அப்போது நானும் பிரதமரும் மட்டுமே நாட்டை ஏற்க முன்வந்தோம்.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினர். எதிர்க்கட்சித் தலைவர் ஓடிவிட்டார். அநுரவைத் தேடவே முடியவில்லை. டொலரின் பெறுமதி 370 ரூபாயாக உயர்ந்தது. மக்கள் கடுமையாகத் துன்பப்பட்டனர். அப்போது சஜித்தும், அநுரவும் எங்கு இருந்தனர்?

மக்களின் துன்பம் புரிந்திருந்தால் ஆட்சியை ஏற்றிருக்க வேண்டும். எதிர்க்கட்சி எந்த வேளையிலும் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இரண்டாம் எதிர்க்கட்சி ஏற்க வேண்டும். அவர்கள் எங்கு இருந்தனர்? இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும். இன்று அநுராதபுரத்தில் ஆரம்பித்து சஜித், அநுரவிடம் இந்தக் கேள்விகளை எல்லா மேடைகளிலும் கேட்பேன். பதில் இருந்தால் கூறுங்கள், இல்லாவிட்டால் எனது மேடையில் இரு பக்கங்களில் வந்து அமருங்கள்.

அன்று உயர்வடைந்த சிலிண்டர் விலை இன்று குறைந்துள்ளது. அதனால் சிலிண்டர் சின்னத்தை ஏற்றுக் கொண்டேன். பெற்றோல், டீசல் விலைகளையும் குறைத்துள்ளோம். பஸ் கட்டணமும் மின் கட்டணமும் குறைந்துள்ளன. இதனால் மட்டும் திருப்தியடைய முடியாது. இது ஆரம்பம் மட்டுமே. இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளது - என்றார். (அ-ம)

## கொடிதுவக்கு...

இடம்பெற்ற பேரணியில், கருணாதாஸ கொடித்துவக்கும் கலந்துகொண்டு தனது ஆதரவை வெளிப்படுத்தினார். (அ-ம)

## மனவளர்ச்சி...

யாழ்ப்பாணம், வடமராட்சி துன்னாலைப்பகுதியை சேர்ந்த குறித்த யுவதிக்கு கடந்த 3 மாதங்களாக மாதவிடாய் ஏற்படாததையடுத்து, கடந்த 14ஆம் திகதி அவருடைய தாய் அவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் யுவதி கர்ப்பமாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார்.

பொலிஸ் விசாரணை களும் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயாருடைய சகோதரியின் கணவரும் (சிறிய தந்தை) இன்னும் இருவரும் இணைந்து, அந்த யுவதியை தொடர்ச்சியாக கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்தனர் என்று பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, சிறுமியின் சிறிய தந்தையான 46 வயதுடைய நபரையும், 28 வயதுடைய மற்றைய இருவரையும் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-100)

## பிரிந்த...

கம்மன்பிலவிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலியுறுத்தியதாகவும், எனினும் அவர் அவற்றை புறக்க ணித்தமையால் தாம் ஜனாதிபதியை ஆதரிக்கத் தீர்மானித்தாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## முல்லை...

என தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ச-19)

## அன்னதானக்...

றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணியளவில் சிறப்பு அபிஷேகம் ஆரம்பமாகும். காலை 7.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வேற் பெருமான், விநாயகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் திருநடனத்துடன் உள்வீதி உலா வந்து முத்தேர்களில் ஆரோகணிப்பர். தொடர்ந்து காலை 9 மணியளவில் முத்தேர்களின் பவனி இடம் பெறும் என ஆலய உரிமையாளரும், ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தார். நாளை திங்கட்கிழமை காலை 8 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், நாளை மாலை 4.30 மணியளவில் மௌனத் திருவிழாவும், தொடர்ந்து கொடியிறக்கத் திருவிழாவும் இடம் பெறுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-ச-66-100)

## வன்முறையில்..

ரைக்கொண்ட குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளின் போது, அந்தக் குழுவினர் டுபாயில் இருந்து வழங்கப்பட்ட உத்தரவுகளுக்கு அமைவாகச் செயற்பட்டதாக வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

அண்மையில் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற ஆறு பேர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர். மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் உத்தரவுக்கமைய யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை களுக்கு அமைவாக சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 19 தொடக்கம் 23 வயதுடையவர்கள். சந்தேகநபர்களிடமிருந்து ஐந்து வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் வன்முறைக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மீட்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-ம-26)

## தவறான

நேற்றுமுன்தினம் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இறப்பு விசாரணையை கொடிகாமம் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சி.தவமலர் மேற்கொண்டார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-ச-159)

# காஸாவில் போலியோ!

காஸா, ஓக. 18

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான மோதல் தீவிரம் பெற்றுள்ள நிலையில், காஸாவில் 25 ஆண்டுகளின் பின்னர் குழந்தையொன்று போலியோத் தொற்றுடன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 11 மாதங்களாக இடம்பெற்று வரும் மோதல்கள் காரணமாக, காஸாவில் பல்வேறுபட்ட மருத்துவப் பெருநெருக்கடி ஏற்பட்டுள்ளது. போஷாக்குக் குறைவான குழந்தைகள் பிறப்பதும், சிறுவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ளவர்களாக மாறிக்கொண்டிருப்பதும் காஸா எதிர்நோக்கியுள்ள பிரதான சுகாதாரப் பிரச்சினைகளாக உள்ளன என்று உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில் எச்சரித்திருந்தது. இவ்வாறிருக்கையில், தற்போது குழந்தையொன்று போலியோத் தொற்றுடன் அங்கு அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை சுகாதார அபாயத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது.

போலியோ தடுப்பூசிகள் காஸாவில் பற்றாக்குறையாகியுள்ளன. தடுப்பூசி செலுத்தப்படாத 10 மாதக் குழந்தையொன்றே இவ்வாறு போலியோத் தொற்றுடன் அவதானிக்கப்பட்டுள்ளது என்று பலஸ்தீன சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

கழிவுநீர் மற்றும் அசுத்தமான சூழல்கள் காரணமாகவே சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் போலியோத் தொற்று ஏற்படும். இது பக்கவாதம் முதல் இறப்புவரையில் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. எனவே காஸாவில் குழந்தைகளும் சிறுவர்களும் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதையே இந்தத் தொற்றுநிலை கட்டியம் செய்கின்றது என்றும் பலஸ்தீன சுகாதாரப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

விவசாயம் செய்வதற்கு தேவையான பசளைகள் (காய்ந்த இலைகள்) விற்பனைக்கு உண்டு.

(CS/55934) J-1

077 129 1636

## பணிப்பெண் தேவை

நன்றாக உணவு சமைப்பதிலும், வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள வீட்டுப் பணிப்பெண் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்ய தேவை.

(CS/1145) J-1

076 287 8157

## அறை வாடகைக்கு

யாழ். கோவில் வீதியில் தொழில் புரியும் ஆண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 640 8830

## காணி விற்பனைக்கு

இராச வீதி கோப்பாயில் ரான்ஸ்போமர் (Transformer) இற்கு முன்பாக 4 சந்திக்கு வடக்கில் 6 பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

(CS/55935) J-1

தொடர்பு:- 077 651 4776

## Room for Rent

Only for ladies

Location Colosed to the bus stand

Kannatthity lane Jaffna

## விற்பனைக்கு

- நல்ல நிலையில் உள்ள யமகா மேற் 50 (YAMAHAMATE) விற்பனைக்குண்டு.
- மிக்சி (GRINDER) உதிரிப்பாகங்களும் மொத்தமாக விற்பனைக்கு.

தொடர்பு: 077 656 6508

## ரஷ்யாவுக்கு பின்னடைவு!

கீவ், ஓக. 18

ரஷ்யாவின் குர்க்ஸ் பிராந்தியத்துக்குள் ஊடுருவியுள்ள உக்ரைன் படை, நேற்று நடைபெற்ற மோதல்களின்போது ரஷ்யப் படைகளுக்கான பிரதான விநியோக மார்க்கமாக இருந்த பாலத்தை ஏவுகணையால் அழித்துள்ளது. (ம)

## வாடகைக்கு

படிக்கும் பெண்பிள்ளைகளுக்கு மற்றும் தொழில் புரியும் பெண்களுக்கு மட்டும் அறைகள் வாடகைக்கு விடப்படும். தபால் பெட்டி சந்திக்கு அருகாமையில்

தொடர்பு: 077 279 1634

## வேலையாட்கள் தேவை

76/1 ராமலிங்கம் வீதி முடமாவடி வீதி நல்லூரில் இயங்கி வரும் தையல் நிலையம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை

(அனுபவ முள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 076 072 9576, 077 911 6807




## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டு சந்தைக்கு 50m மிக அருகாமையில் 1 1/4 பரப்புக் கொண்ட செவ்வக காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 077 843 5336

## வாகனம் விற்பனைக்கு

2018 ம் ஆண்டு நிசான் எக்ஸ்ரயல் (Nissan x-trail) வாகனம் விற்பனைக்கு உள்ளது.

இடம் - யாழ்ப்பாணம்.

(CS/1153) J-1

தொடர்பு:- 076 693 2227

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்

தனி, குழு வகுப்பு

ஆண்டு 7 to GCE OL, AL

பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

(CR/42935) J-1

K.Ganesh B.A 077 766 8725

## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்தியிலிருந்து 200m தூரத்தில் கொக்குவில் பக்கமாக ஆடியபாதம் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட அறைகள் வாடகைக்கு உண்டு.

பல்கலைக்கழக மாணவிகளுக்கு மட்டும்.

(CS/55959) J-1

076 243 0394, 077 166 3859




## வேலையாட்கள் தேவை

ஒஸ்ரியா போட்டோ

வவுனியா கிளையில்

Video Editor & Album Designer

உடனடி வேலைவாய்ப்புக்கள்

முன் அனுபவம் உள்ளோர் முன்னுரிமை

(Salary - 50,000 - 65,000)

(CS/55949) J-1

தொடர்பு:- 077 350 1095

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அண்மையாக பலாலி வீதியிலிருந்து 150 m தூரத்தில் வீட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* மொத்தமாகவும் அல்லது பிரித்தும் கொடுக்கப்படும்
* மொத்த விலை 9 கோடி
* ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நொதேண் வைத்திய சாலை, நல்லூர் கோயில் போன்றவற்றிற்கு 500m அருகாமையில்.

(CS/1133) J-1

தொடர்பு:- உரிமையாளர்

075 776 7777, 076 625 5277

## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் 3 அறைகளும், சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

(CS/55960) J-1

077 166 3859, 076 243 0394

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கணினி விற்பனை நிலையத்திற்கு.

- கணினி திருத்துநர்.
- CCTV கமரா பொருத்துநர்.
- விற்பனை உதவியாளர் (Show Room - ஆண், பெண் இருபாலாரும்)
- காசாளர் - (ஆண், பெண் இருபாலாரும்)

(CS/55945) J-1

தொடர்பு:- 077 462 8002

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம் விழுபளை வீதியில் வடக்கு நோக்கி 1 கி.மீ தூரம்

நிலப்பரப்பு - 66

தென்னை, தோட்டப் பயிர்செய்கைக்கு உகந்த நிலம்.

தரகர் தேவை இல்லை.

(CS/55883) J-1

077 691 4151, 021 227 0948

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல்: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08


# சஞ்சீவி

Registered as a Newspaper


முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்ன இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க! மூள்கவே!

- பட்டினத்தார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஆவணி 02 | ஞாயிற்றுக்கிழமை (18.08.2024) | சிகரம் :214



# சங்கும் சிலிண்டரும்



நிலாந்தன்

இலங்கைத் தீவின் இரண்டு சுயேச்சை வேட்பாளர்கள் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய நிலைமைகள் வளர்ந்து வருகின்றனவா?

முதலாவது சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி. அவர் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறார். இலங்கைத் தீவின் தேர்தல் வரலாற்றில் ஒரு ஜனாதிபதி சுயேச்சைச் சின்னத்தில் போட்டியிடுவது இதுதான் முதல் தடவை. உண்மையில் அவர் சுயேச்சை அல்ல. தாமரை மொட்டுக் கட்சியின் பெரும்பாலான பகுதி அவருக்கு பின் நிற்கின்றது. அப்படிப் பார்த்தால், அவர் தாமரை மொட்டுகளின் மறைமுக வேட்பாளர்களில் ஒருவர். தாமரை மொட்டுக் கட்சி என்பது யுத்த வெற்றிக்குப் பின் எழுச்சி பெற்றது. ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை குடும்பமயப்படுத்தி நிறுவனமயப்படுத்தி கட்டியெழுப்பியதே பொதுஜன பெரமுன எனப்படும் தாமரை மொட்டுக் கட்சியாகும். ஆனால் ரணில் இப்பொழுது அதில் பெரும் பகுதியைச் சாப்பிட்டு விட்டார். இலங்கைத் தீவின் கட்சி வரலாற்றில் இறுதியாகத் தோன்றிய பெரிய கட்சியும் சிதையும் ஒரு நிலை. அதன் விளைவாகத்தான் ரணில் சுயேச்சையாக நிற்கிறார்.

ரணில் சுயேச்சையாக நிற்கிறார் என்பதற்குள் ஓர் அரசியல் செய்தியுண்டு. அது என்னவென்றால் இலங்கைத்தீவின் பிரதான கட்சிகள் யாவும் சிதைந்து போகின்றன என்பதுதான். இலங்கைத் தீவின் மூத்த கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் வாரிசு அவர். ஆனால் அந்தக் கட்சி சிதைந்து சஜித் பிரேமதாஸவின் தலைமையில் வேறொரு கட்சி ஆகிவிட்டது. அதுபோல இலங்கைத் தீவின் மற்றொரு பெரிய பாரம்பரிய கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிதைந்து அதிலிருந்துதான் தாமரை மொட்டுக்கட்சி தோன்றியது. இப்பொழுது தாமரை மொட்டுக் கட்சியும் சிதையத் தொடங்கிவிட்டது.

இக்கட்சிகள் ஏன் சிதைகின்றன? ஏனென்றால் இலங்கைத் தீவின் ஜனநாயகம் சிதைந்து விட்டது. இலங்கைத் தீவின் ஜனநாயகம் எங்கே சிதையத் தொடங்கியது? இலங்கை தீவின் பல்லினத்தன்மையை சிங்கள - பௌத்த பெருந்தேசிய வாதம் ஏற்றுக்கொள்ளத் தவறியபோதுதான். அதாவது இனப்பிரச்சினைதான் இலங்கைத் தீவின் பாரம்பரிய கட்சிகள் சிதைவதற்குக் காரணம். ஈழப் போரின் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் பாரம்பரியக் கட்சிகள் இரண்டுமே சிதைந்து விட்டன. அந்தச் சிதைவிலிருந்து தோன்றிய மற்றொரு பெரிய கட்சியும் சிதையத் தொடங்கிவிட்டது. அந்தச் சிதைவின் வெளிப்பாடுதான் அதாவது இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறினால் இலங்கைத் தீவின் ஜனநாயகம் மேலும் சிதையும் என்பதன் குறியீடு அது.

அவருடைய சின்னம் சிலிண்டர். அதுவும் ஒரு குறியீடு. எந்த ஒரு சிலிண்டருக்காக நாட்கணக்கில் மக்கள் வரிசையில் காத்து நின்றார்களோ அதே சிலிண்டர்தான். அது நாட்டை பொருளாதார ரீதியாக அவர் மீட்டெடுத்ததன் அடையாளமாகக் காட்டப்படக்கூடும். எனினும் ஒரு நாட்டின் ஜனாதிபதி சுயேச்சையாகப் போட்டியிடும் அளவுக்கு நாட்டின் கட்சி நிலைவரம் உள்ளது என்பதை அது காட்டுகிறது. அதாவது ரணில் ஒரு வெற்றியின் சின்னமாக இங்கு தேர்தலில் நிற்கவில்லை. சிதைவின் சின்னமாகத்தான் தேர்தலில் நிற்கின்றார்.

மற்றொரு சுயேச்சை, தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேந்திரன். அவருடைய சின்னம் சங்கு. அது மகாவிஷ்ணுவின் கையில் இருப்பது. போர்க்களத்தில் வெற்றியை அறிவிப்பது. சுடச்சுட பண்பு கெடாது வெண்ணிறமாவது. தமிழ்ப் பண்பாட்டில் பிறப்பிலிருந்து இறப்புவரை வருவது. பிறந்த குழந்தைக்கு முதலில் சங்கில் பாலூட்டுவார்கள். திருமணத்தில் முதலில் பாலூட்டுவது சங்கில்தான். இறப்பிலும் சங்கு ஊதப்படும். அரியநேந்திரன் ஒரு குறியீடு. அவருடைய சின்னமும் ஒரு குறியீடு.

தமிழ்ப் பொதுவேட்பாளர் எனப்படுகின்றவர், தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு. தமிழ்ப்பொது நிலைப்பாடு என்பது பிரயோகத்தில் தமிழ் ஐக்கியம்தான். தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிற்கும் ஒருவர் சுயேச்சையாக நிற்பதன் பொருள் என்ன? அவர் கட்சி கடந்து நிற்கிறார் என்றும் வியாக்கியானம் செய்யலாம். அவர் ஒரு கட்சிப் பாரம்பரியத்தில் வந்தவர்தான். ஆனால் அந்தக் கட்சியின் வேட்பாளராக அவர் இங்கு நிற்கவில்லை. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளின் பிரதிநிதியாகவும் அவர் தேர்தலில் நிற்கவில்லை. அவர் ஒரு பொது நிலைப்பாட்டின் பிரதிநிதியாக நிற்கிறார். அதை ஏனைய கட்சிகள் ஏற்றுக்கொள்கின்றன. இது ஒரு புதிய பண்பாடு. கட்சிக்காக வாக்குக் கேட்காமல், ஒரு தனி நபருக்காக வாக்கு கேட்காமல், ஒரு பொது நிலைப்பாட்டுக்காக வாக்கு கேட்பதற்கு ஒருவரை பொதுவாக நிறுத்தியிருப்பது என்பது.

அரியநேந்திரன் தமிழரசுக் கட்சிப் பாரம்பரியத்தில் வந்தவர். ஆனால் அவருடைய கட்சி பொதுவேட்பாளர் தொடர்பாக இன்று வரை முடிவு எடுக்கவில்லை. கடைசியாக அந்தக் கட்சியின் மத்திய குழு கடந்த வார இறுதியில் கூடியபொழுதும் முடிவு எடுக்கப்படவில்லை. கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் அது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் பொழுது, தமிழ் அரசியலுக்கு தலைமை தாங்கும் கட்சி தங்களுடையது என்ற பொருள்பட பேசியிருக்கிறார். உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம். ஆனால் ஒரு மக்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதாகக் கருதும் ஒரு கட்சி, அதிலும் குறிப்பாக இனஅழிப்புக்கு நீதி கோரும் ஒரு மக்கள் கூட்டத்துக்கு தலைமை தாங்குவதாகக் கருதும் ஒரு கட்சியானது, எவ்வாறு தலைமை தாங்க வேண்டும்? அது எதிர்த் தரப்பின் அல்லது வெளித் தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு பதில் வினையாற்றும் அரசியலை முன்னெடுக்க வேண்டுமா? அல்லது செயல்முனைப்போடு நீதியைக் கோரும் போராட்டமாக அந்த அரசியலை வடிவமைக்க வேண்டுமா?

கட்சியின் மூத்த தலைவர் சிவஞானம் கூறுகிறார், மக்கள் முடிவெடுப்பார்கள் என்று. தலைமை தாங்குவது என்பது மக்களை முடிவெடுக்க விட்டுவிட்டு மக்களின் முடிவைக்ககட்சி பின்பற்றுவது அல்ல. கட்சி முடிவெடுத்து மக்களுக்கு வழிநடத்த வேண்டும். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முடிவுகளை எடுத்து மக்களுக்கு வழிநடத்துவதற்குப் பெயர்தான் தலைமைத்துவம்.

ஆனால் தென்னிலங்கை வேட்பாளர்கள் எதைத் தருவார்கள் என்று அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் வரும்வரையும் காத்திருப்பது என்பது ஒரு போராடும் இனத்துக்கு அழகில்லை; மிடுக்கில்லை; அதற்குப் பெயர் தலைமைத்துவமும் இல்லை.

பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழரசுக்ககட்சி இரண்டாக நிற்கிறது என்பதே உண்மை நிலை. ஒருமித்த முடிவு எடுக்க முடியாமலிருப்பதற்கு அதுதான் காரணம். அதாவது தலைமைத்துவம் பலமாக இல்லை என்று பொருள். தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருப்பது தலைமைத்துவப் பலவீனம்தான்.

கிடைக்கும் தகவல்களின்படி எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் 13ஆவது திருத்தத்திற்கு மேல் எந்த ஒரு தீர்வையும் தரப்போவதில்லை. தமிழரசுக் கட்சி முன்வைக்கும் சமஷ்டித் தீர்வுக்கு எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் தயாராக இல்லை. ஆயின், யாருடைய தேர்தல் அறிக்கைக்காக தமிழரசுக் கட்சி காத்திருக்கின்றது ? அவர்கள் சமஷ்டியைத் தர மாட்டார்கள் என்று தெளிவாகத் தெரிந்த பின்னரும் அவர்களுக்காக காத்திருப்பது எதைக் காட்டுகின்றது? சமஷ்டி அல்லாத வேறு ஏதோ ஒன்றுக்கு இறங்கிப்போகப் போகிறோம் என்பதையா?

அவர்கள் யாருமே சமஷ்டித் தீர்வுக்கு உடன்படத் தயாரில்லை என்றால், அதன் பின் கட்சி என்ன முடிவு எடுக்கும்? தேர்தலைப் பரிஷ்கரிக்குமா? அல்லது பொதுவேட்பாளரை ஆதரிக்குமா? பகிஷ்கரிப்பது தவறு என்று ஏற்கனவே சுமந்திரன் கூறியிருக்கிறார். அப்படியென்றால் பொது வேட்பாளரை ஆதரிப்பதைத் தவிர வேறு தெரிவு இல்லை. அல்லது அவர்கள் தரக்கூடியவற்றுள் பெறவற்றை எப்படிப் பெறலாம் என்று காத்திருக்கிறார்களா? அதற்குச் சிறீதரன் அணி தயாரா?

கட்சியின் மத்தியகுழு கூடுவதற்கு முதல் நாள் சனிக்கிழமை கிளிநொச்சியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது அங்குள்ள விவசாய அமைப்புகள் அப்பொதுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தின. அதில் தமிழ்மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இறுதியில் பேசினார். அவருடைய உரை மிகத் தெளிவாக இருந்தது. அதில் அவர் தமிழ்ப் பொதுவேட்பாளரை நியாயப்படுத்திப் பேசினார். கடந்த மாதம் 22 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தனியார் விருந்தினர் விடுதியில் மாவை சேனாதிராஜாவை சந்தித்தது பற்றியும், மாவையிடம் கையளித்த ஆவணம் ஒன்றைப்பற்றியும் அதிலவர் குறிப்பிட்டார். அந்த ஆவணத்தில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதைப் பற்றிய அம்சங்கள் காணப்பட்டதாகவும் அவர் கூறினார். பொலிஸ் அதிகாரத்தை இப்போதைகுத் தர முடியாது என்றும், அடுத்த நாடாளுமன்ற தேர்தலின் பின் நாடாளுமன்றத்தில் அதைத் தீர்மானிக்கலாம் என்றும் ரணில் கூறியுள்ளார். அதை பதிமூன்று மைனஸ் என்று சிறீதரன் வர்ணித்தார். ஆயின், தமிழரசுக் கட்சி 13 மைனசை ஒரு பேசுபொருளாக ஏற்றுக்கொள்ளத் தயாரா?

இல்லையென்றால், யாரிடமிருந்து சமஷ்டி வரும் என்று சமஷ்டிக் கட்சி காத்திருக்கின்றது? சமஷ்டியை யாராவது ஒரு சிங்களத் தலைவர் தங்கத்தட்டில் வைத்துத்தருவார் என்று இப்பொழுதும் சமஷ்டிக் கட்சி நம்புகின்றதா? போராடாமல் சமஷ்டி கிடைக்கும் என்று சமஷ்டிக் கட்சி நம்புகின்றதா? தமிழ்ப் பொதுவேட்பாளர் என்று தெரிவே அவ்வாறான ஒரு போராட்டந்தான் என்பதனை சமஷ்டிக்கட்சி ஏற்றுக் கொள்கிறதா?

அக்கட்சி முடிவெடுக்காமல் தடுமாறுவதும் ஒரு விதத்தில் பொது வேட்பாளர் அணிக்குச் சாதகமானது. உள்ளதில் பெரிய கட்சி முடிவெடுக்காமல் இரண்டாக நிற்பது பொதுவேட்பாளருக்கு நல்லது. ஏனென்றால் தமிழரசுக் கட்சியின் வாக்காளர்களும் உட்பட தமிழ்மக்கள் தங்களுக்குத் தெளிவான இலக்குகளை முன்வைத்து தங்களை வழிநடத்த தயாரானவர்களின் பின் திரள்வார்கள். ஏற்கனவே ஈரோஸ் இயக்கத்தின் சுயேச்சைக் குழு பெற்ற வெற்றி ஒரு மகத்தான முன்னுதாரணமாகும். அது இலங்கைத் தீவின் தேர்தல் வரலாற்றில், தமிழரசியலில் ஒரு நூதனமான வெற்றி. அந்தத் தேர்தலில் அமிர்தலிங்கம், சம்பந்தர், யோகேஸ்வரன், ஆனந்தசங்கரி உட்பட பல மூத்த தலைவர்கள் தோல்வியடைந்தார்கள். அதைவிட முக்கியமாக திருகோணமலையில் இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. அன்றைக்கு அந்த சுயேச்சைக் குழுவுக்குக் கிடைத்த வெற்றி தமிழ்க் கூட்டுணர்வுக்குக் கிடைத்த வெற்றி. இன்றைக்கும் தமிழ்க் கூட்டுணர்வை பிரதிநிதித்துவப்படுத்தும் அரியநேந்திரனுக்கு தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளிக் கொடுப்பார்களாக இருந்தால், அது தமிழ்த் தேசிய அரசியலின் போக்கை மட்டுமல்ல, இலங்கைத் தீவின் ஒட்டுமொத்த அரசியல் போக்கையும் தீர்மானிக்கும் வாக்களிப்பாக அது அமையும். ■



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்தரப்பு நகர்வுகளும்

பிரஜீவன்ராம்

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் வெளியானதைத் தொடர்ந்து . இலங்கையின் அரசியல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி யார் ? என்பது தொடர்பான எதிர்பார்ப்பு இலங்கை மக்களிடம் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் அதிகம் காணப்படுகின்றது. சில அரசியல் விமர்சகர்கள் இந்தியா, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் இந்தத் தேர்தலில் மறைமுகமாக தாக்கம் செலுத்தலாம் எனக் கூறுகின்றனர்.

இந்த ஆண்டு செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் கிட்டத்தட்ட 30 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ச, விஜயதாஸ ராஜபக்ச, முன்னாள் ராணுவத் தளபதி ஃபீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா போன்றவர்கள் முதன்மை பெறுகின்றனர். அது போல், தமிழ்மக்களை தேசமாகத் திரளச் செய்வதற்காகவும், தமிழ்மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்காகவும் தமிழ்ப் பொதுவேட்பாளராக பாக்கியசெல்வம் அரியநேந்திரன் களமிறக்கப்பட்டுள்ளார். தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினரால் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை இனங்காண்பது சாத்தியமற்றதென விமர்சித்த பலரின் விமர்சனங்களை பொய்யாக்கும் வகையில், தமிழ்ப்பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னரும் தமிழ் மக்கள் மத்தியில் திரட்சியை உருவாக்கும் நோக்கில் சில தமிழர்கள் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார்கள். குறிப்பாக, 1982 ஆம் ஆண்டு ஜே. ஆர் ஜெயவர்த்தனவுக்கு எதிராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவராக இருந்த குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கினார். அவருக்கு அப்பொழுது தமிழ்மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவு கிடைக்கவில்லை, எனினும் தனித்து ஒரு கட்சியின் வேட்பாளராகக் களம் இறங்கி கிட்டத்தட்ட 173, 934 வாக்குகளை அவர் பெற்றுக் கொண்டார்.

அதுபோல் 2010, 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கினார். எனினும் அவருக்குப் பெரிதளவில் தமிழ்மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. ஏன் அவரது சொந்தக் கட்சியான ரெலோ கூட ஆதரவு வழங்க முன்வரவில்லை. ஆனால் இன்று, தமிழ் மக்கள் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கும் அரியநேந்திரனுக்கு தமிழ்மக்கள் பொதுச்சபையும் தமிழ்க்கட்சிகளும் இணைந்த தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஆதரவும், ஆசியும் கிடைத்துள்ளது. தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற கருத்தியல் தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் கருவி என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அதுபோல், தமிழர் தாயக ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் வகையில் வடக்கு, கிழக்கு மக்களின் உணர்வை ஒன்றிணைக்கும் வகையில் கிழக்கிலிருந்து தமிழ்ப் பொதுவேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுள்ளமையும் வரவேற்கத்தக்க முடிவுதான்.

ஆனால், 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற பின்னர் நடைபெற்ற அனைத்து ஜனாதிபதித் தேர்தலில்களிலும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களித்து வந்த தமிழ்மக்களுக்கு தமிழ்ப்பொது வேட்பாளரால் தமிழ்மக்களின் அரசியலில் எவ்வாறான மாற்றத்தௌ நிகழ்த்த முடியும் என்ற சந்தேகம் இருக்கவே செய்யும்.

தமிழ் மக்களை தேசமாகத் திரளச் செய்யும் சக்தி தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்கு உண்டா ?

இன்றுவரை தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படாமைக்கான காரணம் என்ன?

தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்காமல் பதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறுவதைப் போல ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை தமிழ்மக்கள் எடுத்தால் என்ன?

என்ற கேள்விகளும் பலரிடம் இருக்கத்தான் செய்கின்றன.

முதலாவது, தமிழ் மக்களை தேசமா திரளச் செய்யும் சக்தி தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பிடம் உண்டா ? எனும் கேள்விக்கு பதில் 'நிச்சயமாக உண்டு' என்பதுதான் .

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினர் குறித்த சிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்குள் அகப்படாமல், தமிழ்த் தேசிய உணர்வுடன் செயற்படுவார்கள் எனின் தமிழ் மக்கள் திரட்சி என்பது இயல்பாக உருவாகும். அதுபோல், திருகோணமலை, அம்பறை, மட்டக்களப்பு , யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை கொண்ட குறுகிய வட்டத்துள் தமிழ்ப் பொதுச்சபை அடக்கப்படாமல் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளையும் தமிழ்ப் பொதுச்சபை உள்வாக்கி கொண்டால் தமிழ்மக்களை ஓர் அணியாக ஒன்றிணைக்க முடியும். இரண்டு, அண்மையில் தமிழ்ப் பொதுச்சபை உறுப்பினரான சி. அ. யோதிலிங்கத்தின் முகநூலில், அவரின் முகநூல் நண்பர் ஒருவர் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான தேர்தல் விஞ்ஞாபனம் (Election Manifesto ) இதுவரை வெளியிடப்படாதது ஏன் ? எனக் கேள்வி எழுப்பி இருந்தார். இக் கேள்விக்குப் பதிலளித்த யோதிலிங்கம் தமிழ்ப் பொதுவேட்பாளர் தேர்தல் விஞ்ஞாபனம் விரைவில் வெளியிடப்படும் எனத் தெரிவித்தார்.

ஏன் இதுவரை தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவில்லை என்ற இந்தக் கேள்வி அந்த முகநூல் நபரிடம் மட்டுமல்லாது ஏராளம் தமிழர்களிடத்தும் இருக்கவே செய்கின்றது. பல தமிழ்தேசிய பற்றாளர்கள் கூட பரிபூரணமாக தமிழ்த்தேசிய பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவு வழங்காமல் விலகி நிற்பதற்கும், தமது விமர்சனங்களை முன்வைக்காது வேடிக்கை பார்ப்பதற்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படாமையும் ஒரு காரணமாகச் சொல்கிறார்கள்.

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடத் தாமதம் ஏற்பட்டாலும் இதயசுத்தியுடன் நேர்மையாக தமிழ்த்தேசிய உணர்வுக்கு மதிப்பளிக்கும் வகையில்அந்த விஞ்ஞாபனம் உருவாக்கப்பட்டு வெளியிடப்படுமாயின், தமிழ் மக்களின் பரிபூரண ஆதரவு தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு கிடைக்கலாம்.

யதார்த்தத்தில் தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் காணப்படுமாயின், தற்கால தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியினை சரியான முறையில் கையாள்வதன்மூலம் அந்த விஞ்ஞாபனத்தை மிக விரைவிலேயே தமிழ் மக்கள் முன் கொண்டு சேர்த்தும் விடலாம்.

மூன்றாவது கேள்வி, தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்காமல் பதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறுவதைப்போல ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை தமிழ்மக்கள் எடுத்தால் என்ன?

பல இனமக்கள் வாழும் இலங்கை போன்ற ஒரு ஜனநாயக நாட்டில், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறுவதைப் போல தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக தேர்தலை பகிஷ்கரிப்பது. இலங்கையில் தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழமுடியாத சூழ்நிலை நிலவுகின்றது எனவும் ஜனநாயகம் எனும் பெயரில் சிங்களப் பேரினவாத சர்வாதிகார ஆட்சி நடைபெறுகின்றது என்றும் வெளியுலகுக்கு வெளிப்படுத்தலாம்.

எனினும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் இந்தக் கருத்தியல் தமிழ்மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதா ? ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்புத் தொடர்பான கருத்தியலுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு உள்ளதா? என்றால் அதற்குப் பதில் இல்லை என்றவாறே அமைகின்றது .

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் இன்றுவரை ஈழத் தமிழர் அரசியல் உரிமை மறுக்கப்படுகின்றமை உலகறிந்தே, எனவே பகிஷ்கரிப்பின் மூலம் மீண்டும் சிங்களப் பேரினவாதிகளால் தமிழ்மக்களின் அரசியல் உரிமை மறுக்கப்படுகின்றமையை நிறுவுவதற்கு பதிலாக, தமிழ்ப் பொதுவேட்பாளர் துணை கொண்டு, தமிழ்மக்கள் தமது ஒருமித்த குரலில் தமது அபிலாஷைகளை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவது கவனக்குவிப்பான பொறிமுறையாக இருக்கும். எனினும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினர் தமிழ்த்தேசிய உணர்வுடன்தான் பொது வேட்பாளர் விடயத்தை மேற்கொள்கின்றார்களா ? என்ற ஐயமும் தமிழ்தேசியப் பற்றாளர்களிடம் இல்லாமலில்லை.

ஏனெனில், இன்றும் சிலர் தமிழ்த்தேசிய அரசியல் என்பது போலியானது. தேவையற்றது. பிற்போக்கான சிந்தனை, தமிழ் இனவெறியின் வெளிப்பாடு, ஏமாற்று வித்தை எனும் கருத்தியல்களை திட்டமிட்டு தமிழ்மக்கள் மத்தியில் குறிப்பாக இளையோர் மத்தியில் விதைக்கின்றனர்.

என்றைக்கு தமிழ்மக்கள் மனதில் தமிழ்த்தேசிய அரசியலில் மீது நம்பிக்கை குறைகின்றதோ அன்றைக்கு தமிழர் பண்பாடும் மெல்ல மெல்ல சிதைய ஆரம்பிக்கும் என்பது அத்தகையோருக்கு நன்கு தெரியும். அதனால்தான் திட்டமிட்டு அவர்கள் தமிழ்த்தேசிய நீக்கத்தை முன்னெடுக்கின்றனர். எத்தனையோ தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் தம் இன்னுயிரை தியாகம் செய்தன் விளைவாகவேஇன்றும் ஈழமண்ணில் தமிழர் பண்பாடு நிலைத்திருக்கின்றது.

இவர்களின் தியாகத்தை மனதில் கொண்டு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பங்காளர்கள் செயற்பட வேண்டும்.

அதைவிடுத்து தமது தனிப்பட்ட சுயலாபத்துக்காகவும், வெளிநாடுகளின் நிகழ்ச்சி நிரல்களுக்காகவும் தாளம் போடும் வகையிலும் இவர்கள் செயற்பட்டால், தமிழர் வரலாற்றில் தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பும் கறைபடிந்த அமைப்பாகவே பதிவாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி



விசும்பின் துளி வீழின் அல்லால்...

## அறைகூவல்!

**நீர் பாதுகாவலர்களுக்கான செயற்பாட்டு வாய்ப்பு**

**வடக்கின் நிலத்தடி நீர் பேணுதலில் WASPAR இன் வகிபாகம்**

இடம் : WASPAR கண்காட்சிக் கூடம், சங்கிலியன் பூங்கா, நல்லூர்
திகதி : 29.08.2024
நேரம் : மாலை 4 மணி முதல்

திருவிழாக்கால சூழலில் எங்கள் கண்காட்சிக்கூடத்துக்கு வர விருக்கும் மக்களுடனான நேரடித் தொடர்பு, வைக்கப்பட்டுள்ள காட்சிகள் பற்றிய விமர்சனம், தெளிவு மற்றும் எழுகின்ற கேள்வி,பதில்களில் பங்கு பெறுதல் போன்ற நேரடி அனுப வம்மிக்க அரிய வாய்ப்பு

**"நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி வாருங்கள் செயற்பட ஒன்று கூடி"**

## புலமையாளர் பதில்

**கேள்வி:** கடல் நீரை உப்பகற்றி குடிதண்ணீர் தேவைக்குப் பயன்படுத்தும் நடைமுறை எவ்வளவு சாத்தியமானது? அது சூழல் சார் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்தாதா?

**(கவிநிலா, கோப்பாய் )**

உவர் நீரை நல்ல நீராய் மாற்றும் செயற்பாடு உலகத்தில் சில நாடுகளில் பயன்பாட்டில் உள்ளது. ஏறத்தாழ 300 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்குத் தேவையான குடி தண்ணீர் இம்முறையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. பல்வேறு வழிமுறைகளில் இச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டாலும் அடிப்படையில் இங்கு அதிக உப்பு செறிவு கொண்ட நீர் செறிவகற்றப்பட்டு குடிதண்ணீருக்குத் தேவையான கனிப் பொருள்களை மீளச் சேர்த்துப் பயன்படுத்தும் செயற்பாடே நடைபெறுகிறது.

இயற்கை வளங்களைப் பயன்படுத்தும்போது அங்கு நாங்கள் இயற்கைக்கு மாறான விடயங்களையே செய்கிறோம். அப்போது அங்கு நிச்சயமாக சூழல்சார் சமநிலையில் பாதிப்புகள் ஏற்படும். அது இந்த உவரகற்றும் பொறிமுறைக்கும் பொருந்தும். இப் பொறிமுறை மூலம் வெளிவரும் உப்புகளின் மிகை செறிவு கொண்ட கழிவு நீர் எங்கு, எப்படி அகற்றப்படுகின்றது அல்லது எவ்வகையில் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்து பாதிப்புகளின் தன்மை மாறுபடும்.

இச் செறிவான நீரை மீளக் கடலுக்குள் விடும்போது கடலில் நடைபெற்று வந்த சாதாரண இயற்கை சுழற்சி முறைகளில் மாறுதல்கள் ஏற்படும். அந்தச் சூழல் தொகுதியின் மாறுபாடு பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும். இது நாங்கள் பாவிக்கும் பின் பிரசாரண (Reverse Osmosis RO ) முறை நீர் சுத்திகரிப்புக்கும் கூடப் பொருந்தும்.

பெரும் உவரகற்றும் (Desalinisation) திட்டத்தின் விளைபொருளான அதி உவர் நீரை மீளக் கடலிலே வெளியேற்றுவதும் இத்திட்டத்தின் சக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மின்சாரத்தை உற்பத்தி செய்ய சுவட்டு எரிபொருட்கள் பாவிக்கப்படுவதும் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும். நீர் வாழ் உயிரினங்கள் வாழும் பகுதிகளில் இந்த உப்புச் செறிவான நீர் கலக்கப்பட்டால் அவற்றின் வாழ்வு அச்சுறுத்தலுக்குள்ளாகும். இவை பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. இம்முறைமையின் கட்டுமானச் செலவும் பராமரிப்புச் செலவும் சூழல் பாதிப்பின் பெறுமதியும் மிக அதிகமாகையால், குடிதண்ணீர் அறவே இல்லாத பகுதிகளுக்கு குடிதண்ணீரை வழங்குவதற்கு மாத்திரமே இம்முறைமை பொருத்தமானதாகவிருக்கும் என ஆய்வுகள் பரிந்துரைக்கின்றன.



**பேராசிரியர் கணபதி கஜபதி**
விலங்கியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

### நல்லூர்த் திருவிழாவில்

## நிலத்தடி நீர் பற்றிய விழிப்புணர்வு





நிலத்தடிநீர் சார்பான முயற்சிகளில் அதிக கவனம் செலுத்துகின்ற யாழ். பல்கலைக்கழகத்தின் WASPAR செயற்றிட்டம் "நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி: வாருங்கள் செயற்பட ஒன்று கூடி" என்ற கருப்பொருளில் விழிப்புணர்வுக் கண்காட்சியை நடத்தத் தீர்மானித்துள்ளது . எமது பிரதேசத்தில் ஆவணி மாத காலப்பகுதியில் அதிமுக்கியத்துவம் பெறுகின்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தத் திருவிழாவின் இறுதி பத்து நாட்களினை மையப்படுத்தி மக்களின் ஈடுபாட்டை கவனத்திற் கொண்டு ஆவணி மாதம் 26 ஆம் திகதி முதல் புரட்டாதி மாதம் 4 ஆம் திகதி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கண்காட்சிக் கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இக் கண்காட்சி நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கான தேவைப்பாடு என்ற கருப்பொருளை மக்கள் மத்தியில் அதிலும் குறிப்பாக இளையோர் மத்தியில் திறம்படத் தெரிவிக்க முனைகிறது. அது மட்டுமன்றி நீர்சார் திணைக்களங்கள், நிர்வாக அலகுகளின் பங்களிப்பினையும், ஒருங்கிணைப்பையும் பயன்படுத்த நிலத்தடி நீரின் பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு மட்டத்தில் பங்கேற்க வல்ல சமூகஉறுப்பினர்கள், பொதுமக்கள், மாணவர்கள், இளையோர், விவசாயிகள், அரச அலுவலர்கள் போன்ற எல்லோரையும் நோக்கி ஒவ்வொரு பிரிவினரின் தனித்துவமான வகிபாகத்தினையும் உறுதிசெய்ய முனைகிறது.

நிலத்தடி நீர் பாதுகாப்புத் தொடர்பாக பங்கேற்பாளர்களை ஈர்த்தெடுப்பதற்கும், அறிவுறுத்துவதற்கும் உரியவகையில் கண்காட்சிக்கூறுகள் வடிவமைக்கப்படவுள்ளன. கண்காட்சிக்கூடத்தில் பார்வையாளர்கள் புதிர்கள், போட்டிகளில் பங்குபற்றவும் பரிசுகள் பெறவும் வாய்ப்புகளுண்டு. நிலத்தடி நீரின் புதுமை சார் பாதுகாப்பு முயற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள், ஆய்வுகளின் பெறுபேறுகள் யாவும் இக்கூடங்களில் காட்சிப்படுத்தப்படவிருக்கின்றன. இப் பத்து நாட் கண்காட்சி நிகழ்வில் தன்னார்வலர்களாக இணையவிரும்புவோர் எம்மோடு தொடர்புகொள்ள முடியும். திருவிழாக் காலத்தில் சங்கிலியன் பூங்காவுக்கும் தவறாமல் வந்து நிலத்தடிநீர் சார்ந்த உங்கள் விழிப்புணர்வை சோதித்து பரிசில்களை வெல்லுங்கள். தொடர்புகளுக்கு 0773423576

### வடக்கின் நீர்ப்பாதுகாப்பில்

கடந்த மாத அமர்வு

## வணிக, முகாமைத்துவ ஆய்வாளர்கள்

வடக்கின் இளம் நீர்வாண்மையாளர்கள் வட்டத்தின் கடந்தமாத அமர்வில் "வடக்கின் நீர்ப்பாதுகாப்பு தொடர்பில் வணிக, முகாமைத்துவ ஆய்வாளர்களின் பங்கு" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் வணிக, முகாமைத்துவப் பீடத்தின் சந்தைப்படுத்தல்துறை பேராசிரியர் சிவாணி சண்முகதாஸ் கருத்துரை வழங்கியிருந்தார்.

நிலத்தடி நீரை பிரதான நீர் மூலமாகக் கொண்ட வடமாகாணத்தில் இன்றைய நாட்களில் நீரானது அதன் பாதுகாப்பு, நிலைபேறு தொடர்பில் சவால்களையும், பிரச்சினைகளையும் பல்வேறு வகைகளில் எதிர்கொள்கின்றது. ஆரம்ப காலம் தொடக்கம் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கிணறுகளை அமைத்து அவற்றைப் பரம்பரைச் சொத்தாக தமது சந்ததியினருக்கு வழங்கி வந்த சமூகம் இன்று கிணற்று நீரை நம்பிப் பருகுவதற்கே தயங்குகின்றமை நீர் சார்ந்த பாதுகாப்பில் விடைகாண முடியாத வினாக்களை எழுப்பியுள்ளது.

வணிக நிறுவனங்களின் பெருக்கம், விரிவாக்கம், உற்பத்தி செயன்முறையினை அதிகரித்தல், இலாப நோக்க நடவடிக்கைகள், பல்துறைகளின் பெருக்கம், நீரை அடிப்படையாகக்கொண்ட தொழில்முறைகளின் வளர்ச்சி, வணிகச் செயற்பாடுகள் எனப் பல்வேறான காரணிகள் நீர்ப் பாதுகாப்புக்கு பெரும் சவாலாக அமைகின்றன. சமூக மட்டத்தில் பெரும்பிரச்சினையாக உருவெடுக்கும் நீர்ப் பாதுகாப்புக்கு வணிக, முகாமைத்துவ ஆய்வாளர்கள் பல்வேறான பரிமாணங்களில் பங்காற்றமுடியும் என்பதை பேராசிரியர் நிலைநிறுத்திப் பேசியிருந்தார். குறிப்பாக உண்மைத்தன்மை, நம்பிக்கையான முடிவுகளினை காரண, காரியத் தொடர்புகளின் அடிப்படையில் தரவுகள் மூலமாகத் தெரியப்படுத்துவதே ஆய்வாகும். எனவே இடர்பாடுக்குள்ளாகும் நீர்சார் பிரச்சினைகளை மக்கள் மத்தியில் கொண்டு வருவதற்கும், வணிக சார்பான நிறுவனங்களின் தூரநோக்கான செயற்பாடுகளை நிறுவுவதற்கும், வினைத்திறனாகவும் அதேவேளையில் சமூக தேவையினை பூர்த்தி செய்ய நீர்ப்பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அதிகரித்த பாவனை, சுரண்டல்களைத் தடுப்பதற்குரிய மூலோபாய உத்திகளை நடைமுறைப்படுத்த வணிக, முகாமைத்துவ ஆய்வுகள் பெரிதும் உதவுகின்றன.

மேலும் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய வணிக, முகாமைத்துவ பீடத்தின் துறைசார் வாண்மையாளர்கள் நீர்ப் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுச் செயன்முறைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும்போதும், அது தொடர்பில் பேசும்போதும் பரந்த விடயங்களை வெளிப்படுத்துகின்றனர். மாணவர்கள் கற்றல்சார் செயற்பாடுகளை மேம்படுத்தவும், நடைமுறைப் படுத்தவும் நீரினை மையப்படுத்திய விடயங்களை, விழிப்புணர்வுகளை சமூகமட்டத்தில் வெளிக்கொணர்வதன் அடிப்படையில் ஆய்வாளர்களின் பங்கு மிக முக்கியமானது. இன்றைய காலப்பகுதியில் நீரின் நிலைபேறான தன்மையின் பாதிப்புக்கு ஏராளமான காரணிகள் தூண்டுதலாக அமைவதால் அவைபற்றிய பொறுப்புக்கூறல் சமூகத்தில் எல்லோரதும் கடமையாகும். இவ்வாய்வாளர்களின் ஆய்வுச் செயற்பாடுகள் மூலம் புதிய உத்திகள், கொள்கை ரீதியான செயற்பாடுகள், சட்ட ரீதியான மாற்றங்கள் போன்றவற்றை ஏற்படுத்துதல், தெளிவுபடுத்துதல், நடைமுறைப்படுத்துதல் மூலம் இடர்பாடுகளுக்குள்ளாகும் நீர்ப்பாதுகாப்பு தொடர்பாக நிலைபேறான சாதகமான விளைவை கட்டியெழுப்பமுடியும்.

நீர்சார் ஆய்வுகளை துறைசார்ந்து வரையறுக்க இயலாது. நீர்த்துறைகளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. ஆதலினால் எத்துறை சாரினும் ஆய்வாளர்கள் நீர்சார் உணர்திறனுடன் செயற்படுதல் வடமாகாணத்தின் நீர்ப்பாதுகாப்புக்கு மிகவும் அவசியமானதாகும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி துளியின் 7 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடி வரும். வடமாகாணத்து நீர் வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி: **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemiology, Faculty of Medicine, University of Jaffna;** மின்னஞ்சல்: **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் முதுகில் பயணிக்கும் தலைவர்கள்



டிலீப் அமுதன்

இளநீர் குடிப்பது யாரோ? கோம்பை சாப்பிடுவது யாரோ? என்ற பழமொழியின் அர்த்தம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நாட்டின் தலைவர்கள் உல்லாச வாழ்க்கை வாழ அதற்கும் சேர்த்து மாடாக உழைக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர் நாட்டு மக்கள். இலங்கை 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் அப்போதிருந்த ஆட்சித் தலைவர் கோத்தாபய விரட்டப்பட்டதும் அதன்பின்னர் ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்ததும் பழைய விடயங்கள்தான். இந்த நாடு வங்குரோத்து அடைவதற்கு பல்வேறு காரணங்கள் அடுக்கப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்வோம் என சர்வதேச நாணயநிதியத்துக்கு வாக்குறுதி கொடுத்தாலும் ஆட்சியாளர்கள் நாய்வால் போன்று திருத்தப்பட முடியாதவர்களாகவே இருக்கின்றனர். சர்வதேச நாணயநிதியத்தின் வேலைத் திட்டத்தால் மக்களுக்கு ஏற்படும் சுமைகளுக்கு தீர்வை வழங்காத ஆட்சியாளர்கள், மக்களைத் தியாகம் செய்யுமாறு கோருகின்றனர். ஆனால் தங்கள் சுகபோகங்களை அவர்கள் தியாகம் செய்யத் தயாரில்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக நீண்ட போராட்டத்தின் பின்னர் அம்பலமாகியிருக்கின்றது.

## 17 கோடி ரூபா ஏப்பம்

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மிகக்குறுகிய பதவிக் காலத்தில் 11 நாடுகளுக்குப் பயணம் செய்வதற்கு 17 கோடி ரூபா இலங்கை மக்களின் பணத்தைச் செலவிட்டிருக்கின்றார் என்பதுதான் அந்தத் தகவல். இந்தத் தகவல் ஜனாதிபதி செயலகத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக விண்ணப்பித்து, தேசியப் பாதுகாப்பை காரணம் காட்டி மறுக்கப்பட்டு தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் முறையிடப்பட்டு ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைவாக, நீண்ட இழுபறியின் பின்னரே ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பில் 2023ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி முதலாவது தகவல் கோரிக்கை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தேசியப் பாதுகாப்பை காரணம்காட்டி அது மறுக்கப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு அமைவாக குறித்தளிக்கப்பட்ட அலுவலரிடம் 29ஆம் திகதி மே மாதம் 2023ஆம் ஆண்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன்போது குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு சில விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

## கோத்தாவின் கணக்கு

ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச பதவி வகித்தபோது அமெரிக்காவுக்கு 2021ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்துக்கான செலவினங்கள், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் பயணித்தவர்களின் விவரங்கள், அவர்கள் அந்தப் பயணத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட நோக்கங்கள் பற்றியும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.



ஜனாதிபதி செயலகம் அந்தத் தகவல் கோரிக்கையை, தேசியப் பாதுகாப்பைக் காரணம் காட்டி தகவல் வழங்க மறுத்திருந்தது. தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் மேன்முறையீடு முன்வைக்கப்பட்டதற்கு அமைவாக 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி தகவல்களை வழங்குமாறு ஆணைக்குழு பணித்தது. ஜனாதிபதி கோத்தாபயவுடன் பயணித்த பாதுகாப்புத் தரப்பினரின் விவரங்களை வெளியிட முடியாது என்ற ஜனாதிபதி செயலகத்தின் கோரிக்கை ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு எஞ்சிய தகவல்களை வெளியிடுமாறு ஆணைக்குழு பணித்தது. ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைவாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் அந்தப் பயணத்தில் யார், யார் இணைந்து கொண்டார்கள்? அவர்கள் ஏன் இணைக்கப்பட்டனர் என்ற விவரங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் அமையக் கொடுப்பனவாக 12 இலட்சத்து 33 ஆயிரத்து 225 ரூபாவும், இணைந்த கொடுப்பனவாக 29 இலட்சத்து 24 ஆயிரத்து 824 ரூபாவும் செலவு செய்யப்பட்டதாகப் பதிலளிக்கப்பட்டது.

## கண்மூடியிருந்த ஜனாதிபதி செயலகம்

இந்த வழக்குச் சுருக்கத்தை சுட்டிக்காட்டி ஜனாதிபதி செயலகத்தின் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டபோதும், தேசியப் பாதுகாப்பை முன்னிறுத்தி தகவல் வழங்க மறுக்கப்படுவதாக குறித்தளிக்கப்பட்ட அலுவலரால் 2023ஆம் ஆண்டு ஜுன் மாதம் 20ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது. அன்றைய தினமே தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது.

ஆணைக்குழுவில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதும் தேசியப் பாதுகாப்பை காரணம் காட்டி தகவல் வழங்க மறுப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. முன்னைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பயணச் செலவு விவரங்கள் வழங்கப்பட்டதை ஆணைக்குழு சுட்டிக்காட்டியபின்னர், ஜனாதிபதியின் பயணத்துக்கான விமானப் பயணச் சீட்டுக்கான செலவு மாத்திரமே ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டு, அந்த விவரம் மாத்திரம் வழங்க முடியும் எனவும், ஜனாதிபதியுடன் பயணித்தவர்கள் உள்ளிட்ட விவரங்கள் வழங்கமுடியாது என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

## ஆணைக்குழுவின் கட்டளை

2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதியின் விமானப் பயணச் சீட்டு விவரத்தை வழங்குமாறு தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி செயலகத்துக்கு கட்டளையிட்டது. அதற்கு அமைவாக ஜனாதிபதி செயலகத்தால் ஜனாதிபதியின் பயண விவரங்கள் வழங்கப்பட்டன. இதற்கிடையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்தடுத்த வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி செயலகத்துக்கு தொடர்ச்சியாக தகவல் கோரிக்கை முன்வைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அவர்களும் அதை நிராகரித்துக்கொண்டிருந்தார்கள். தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழுவில் ஒவ்வொரு முறைப்பாடாக எடுத்து விசாரிக்கப்பட்டு தகவல் வழங்குமாறு பணித்த பின்னர் ஜனாதிபதி செயலகத்தால், ஜனாதிபதியின் விமானப் பயணச் சீட்டு விவரம் மாத்திரம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி இடம்பெற்ற விசாரணையின்போது, ஜனாதிபதியின் விமானப் பயணச் சீட்டு விவரங்கள் மாத்திரம் ஜனாதிபதி செயலகத்திடம் உள்ளதாயின் ஏனைய செலவு விவரங்கள் எங்குள்ளன என்ற கேள்வி ஜனாதிபதி செயலக அதிகாரிகளிடம் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவால் எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி செயலக அதிகாரிகள் அவற்றை, வெளிவிவகார அமைச்சே கையாள்வதாகக் குறிப்பிட்டனர். இதனையடுத்து இதைச் சுட்டிக்காட்டி வெளிவிவகார அமைச்சிடம், ஜனாதிபதியின் ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்துக்குமான உணவு மற்றும் தங்குமிடம் உள்ளிட்ட செலவுகளுக்கான விவரங்கள் கோரி தகவல் கோரிக்கை அனுப்பப்பட்டது. தகவல் அலுவலர் 14 வேலை நாள்கள் கடந்தும் பதிலளிக்காத நிலையில் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது.

குறித்தளிக்கப்பட்ட அலுவலர், தகவல் கோரிக்கையாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை கோரினார். இதன்போது, தகவல் கோரிக்கை முன்வைக்கப்படும்போது தேசிய அடையாள அட்டை இலக்கம் வழங்கப்படத்தேவையில்லை என்பதையும் இது தொடர்பில் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்னர் வழங்கிய கட்டளையையும் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு சுட்டிக்காட்டி பதில் அனுப்பப்பட்டது. இதன் பின்னர், மேற்படி தகவலுக்கான கோரிக்கை வெளிவிவகார அமைச்சிடம் இல்லை என்று பதில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. அதாவது அந்தச் செலவு விவரங்கள் வெளிவிவகார அமைச்சிடமே இருக்கின்றது என்று ஜனாதிபதி செயலக அதிகாரிகள், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு விசாரணையில் தெரிவித்தபோதும், அப்படியான தகவல்கள் தங்களிடம் இல்லை என மூடி மறைக்க முற்பட்டது வெளிவிவகார அமைச்சு.

இதனையடுத்து தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம், வெளிவிவகார அமைச்சுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது. தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முதலாவது விசாரணையின்போது வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொள்ளவில்லை. இருப்பினும் தகவல் வழங்கப்படவேண்டும் என்ற தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்தின்போதான உணவு, தங்குமிடம் தொடர்பான செலவு விவரங்கள் வழங்கப்பட்டன.

## மீண்டும் மீண்டும் நிராகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணமும் மேற்கொள்ளப்பட்டதும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்துக்கு தகவல் கோரிக்கை முன்வைக்கப்பட்டாலும் தொடர்ச்சியாக அவர்கள் நிராகரித்துக்கொண்டே வந்தார்கள். குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கான மேன்முறையீடும் அப்படித்தான் நிராகரிக்கப்பட்டுக்கொண்டேயிருந்தது. தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு தொடர்ச்சியாக மேன்முறையீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதியின் பயணம் தொடர்பான தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் கட்டளை 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட பின்னரும், ஜனாதிபதி செயலகத்தால் அதேபோன்ற தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. இதனை தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு சுட்டிக்காட்டியபோதும் ஜனாதிபதி செயலகத்தின் நடவடிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.

(மிகுதி அடுத்தவாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யாத தவறுக்கு சிறைவாசம்

## ஒரு புலனாய்வு அதிகாரிக்கு அரசு கொடுத்த பரிசு

கே.வி.தவராசா

கொழும்பு - 08 பொரளை பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக இரகசியமாக இயக்கப்பட்ட புலனாய்வுப் பிரிவில் அதிகாரியாகச் சேவையாற்றி வந்த துர்யலாகே தர்மதாச 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அரசபுலனாய்வுத்துறை அதிகாரியை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை நடத்தப்பட்டது. பின்னர் தர்மதாசவுக்கு எதிராக சட்டமா அதிபரினால் துர்யலாகேவால் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச் சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயவிருப்பில் தர்மதாசவால் வழங்கப்பட்டதாக அரச தரப்பினால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 12 சாட்சியங்களை அரச சாட்சிகளாகக் குறிப்பிட்டு மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ்இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(1) ஆர்.டி.எக்ஸ். 23 கிராம் தனி உடைமையில் வைத்திருந்தமை
(2) 35 துப்பாக்கி ரவைகள் மற்றும் 8 சயனைட் வில்லைகளைத் தனி உடைமையில் வைத்திருந்தமை
(3) பாதுகாப்பு இரகசியங்களை புலிகளின் உளவுத் துறைக்கு வழங்கியமை

இவையே தர்மதாச மீதான குற்றச்சாட்டுகள்.

இந்தவழக்கில் பிரதான சான்றாக அரசதரப்பில் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் உண்மைத் தன்மையை அறிய உண்மை விளம்பல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது கொழும்பு பயங்கரவாதத் தடைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ. ரணசிங்கவின் சாட்சியத்தினை அரச சட்டத்தரணி நெறிப்படுத்தினார். பின்னர் எதிராளி தரப்பின் குறுக்கு விசாரணைக்காக காலம் வழங்கப்பட்டது. பொலிஸ் அத்தியட்சகர் எஸ். எல் .ஏ. ரணசிங்கவின் சாட்சியத்தினை எதிராளி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய நீதிமன்றத்தினால் பல தவணைகள் வழங்கப்பட்ட போதிலும் அரச சாட்சியான பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்காமையினால் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை நடைபெறவில்லை.



2007 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரியான தர்மதாசவுக்கு எதிராக 2010 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இன்மையால் விரக்தியடைந்த கைதியும் குடும்பத்தாரும் இந்த வழக்கை எடுத்து நடத்துமாறு எமக்கு நெருக்கமான அமைச்சர் ஒருவரின் ஊடாக அன்பான வேண்டுகோள் விடுத்ததையடுத்தும், மேலும் இந்த வழக்கை நடத்திய சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கு இணங்கவும் இந்த வழக்கை எடுத்து நடத்தத் தீர்மானித்தோம்.

இந்த வழக்கு 2017 ஆம் ஆண்டு சித்திரை மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிமன்றின் கவனத்துக்கு எனது சமர்ப்பணத்தில் கொண்டுவரப்பட்டதாவது,

2007 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைப் பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட கொழும்பு பொரளை புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரியான தர்மதாசவுக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கியதாகவும் 23 கிராம் ஆர்.டி. எக்ஸ். வெடிமருந்து , 35 துப்பாக்கிரவைகள், 8 சயனைட் வில்லைகள் என்பவற்றை உடைமையில் வைத்திருந்ததாகவும் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி சட்டமா அதிபரினால் இந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணையில் அரச தரப்பின் முக்கியமான சாட்சியான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ.ரணசிங்கவுக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் இந்த நீதிமன்றில் ஆஜராகும்படி கடந்த 7 வருடங்களாக பல அழைப்பாணைகளை அனுப்பிய போதிலும் இந்த அரசசாட்சி இந்த நீதிமன்றில் ஆஜராகவில்லை .

### 7 வருடங்களாக நீதிமன்றம் வருகைதராத அரசசாட்சி

பொலிஸ் அத்தியட்சகரான இந்த சாட்சி நிதி மோசடி வழக்கில் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் அவர் நீதிமன்றில் ஆஜராக முடியாதுள்ளதாக முன்னர் கூறப்பட்டது. ஆனால் கடந்த சில வருடங்களாக சுகவீனம் காரணமாக நீதிமன்றுக்கு சமுகமளிக்கமுடியவில்லையென நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளமுடியாத காரணங்கள் பலவருடங்களாக அரசதரப்பால் கூறப்படுகின்றன. மேலும் இந்த சாட்சி நீதிமன்றம் வருகை தராமையால் எதிராளி தரப்பில் இந்த சாட்சியை ஏழு வருடங்களாக குறுக்கு விசாரணை செய்ய முடியாதுள்ளதனால் எதிராளி தொடர்ந்தும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கின் விசாரணைகள் நியாயமான . நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களால் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் காலதாமதமாகலாம். ஆனால் அரச சாட்சியான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல். ஏ.ரணசிங்க ஏழு வருடங்களாக வழக்கு விசாரணைக்கு நியாயமான காரணங்களின்றி வருகை தராமையானது அவரது நடவடிக்கைகள் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடாகும்.

கடந்த தவணை அரசதரப்புக்கு இறுதித் தவணையாக வழங்கப்பட்டது . ஆனால் இன்றும் இந்த அரச சாட்சி நீதிமன்றுக்கு சமுகமளிக்கவில்லை. இந்த வழக்கின் எதிராளி கைது செய்யப்பட்ட தினத்திலிருந்து கடந்த 10 வருடங்களாக எந்தவித விசாரணையோ அல்லது விடுதலையும் இன்றி தொடர்ந்து விளக்கமறியலில் உள்ளார். இந்த எதிராளிக்கு எதிரான வழக்கில் விசாரணை முடிவடைந்து நீதிமன்றம் குற்றவாளியா கத் தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும் முழுத் தண்டணைக் காலத்தையும் நிறைவு செய்து பல வருடங்களுக்க முன்னரே விடுதலையாகியிருப்பார். இந்தக் கைதி எந்தவித விசாரணையுமின்றி 10 வருடகாலம் சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்தமையை சட்டமா அதிபர் திணைக்களம் விதிவிலக்கான சூழ்நிலையென கவனத்தில் எடுத்து இந்த நீதிமன்றம் பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்காமல் இருந்திருக்கலாம், ஆனால் எதிராளி தரப்பில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டவேளையில் சட்டமா அதிபரின் ஆட்சேபனையால் இந்த நீதிமன்றம் இந்தக் கைதிக்குப் பிணை வழங்கவில்லை. எனவே சட்டமா அதிபர் வழக்கை நடத்தி முடிக்க வேண்டும் அல்லது இந்த நீதிமன்றம் கைதியை விடுதலை செய்ய வேண்டும்' - என என் வாதத்தை முன்வைத்தேன்.

### பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்ற பிடியாணை

கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க அரச சாட்சியின் பொறுப்பற்றபோக்குக் குறித்து கடும் கண்டனம் வெளியிட்டதுடன் அரச சாட்சியான பயங்கரவாதத்தடைப்பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எல்.ஏ. ரணசிங்கவை கைதுசெய்து நீதிமன்றில் பாரப்படுத்தும் படி பகிரங்க பிடியாணை பிறப்பித்த துடன், பிடியாணையை உடனடியாக செயற்படுத்தும்படியும் பொலிஸாருக்குக் கட்டளையிட்டு, மேலதிக விசாரணையை 2017 ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். குறித்த திகதியில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது இந்த வழக்கின் முக்கியமான சாட்சியான பொலிஸ் அதிகாரி எஸ்.எல்.ஏ. ரணசிங்க ஏழு வருடங்களின் பின்னர் மருத்துவச் சான்றிதழ்களுடன் நீதிமன்றில் ஆஜரானார். கடும் சுகவீனம் அடைந்திருந்ததாகவும் மேலும் நிதிமோசடியில் தொடர்புபட்டுள்ளதாக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டமையாலும் நீதிமன் றில் இந்த வழக்குக்கு ஆஜராக முடியவில்லை எனத் தெரிவித்ததை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்படி பணித்ததையடுத்து விசாரணைகள் தொடர்ந்தன. உண்மை விளம்பல் விசாரணையில் அரசதரப்பினால் சாட்சியமாகஅழைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி எஸ்.எல்.ஏ.ரணசிங்க,, உப பொலிஸ் பரிசோதகர் ஆப்தீன், சட்ட மருத்துவ அதிகாரி மடவெல, உப பொலிஸ் பரிசோதகர் சாமிலி ஆகியோரது சாட்சியங்களும் எதிராளி தரப்பில் எதிராளியாகிய துர்யலாகே தர்மதாசவின் சாட்சியமும் எனது வேண்டுகோளுக்கு இணங்க நீதிமன்றத்தில் தொடர்ச்சியாகப் பெறப்பட்டு, மூன்று மாதங்களில் நிறைவடைந்தது. குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் உண்மைத் தன்மையை அறிய நடத்தப்பட்ட உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்ததுடன் அரச சட்டத்தரணியினதும் எதிராளி தரப்பினதும் சட்ட நிகழ்வு சமர்ப்பணங்களின் பின்னர் கட்டளை வழங்குவதற்காக நீதிபதி 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.




### குற்றஒப்புதல் வாக்குமூலம் சான்றாக ஏற்பு

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க தனது கட்டளையில் ' பொலிஸ் அதிகாரி எஸ்.எல்.ஏ.ரணசிங்கவுக்கு எதிராளி தனது கையினாலேயே எழுதிக் கொடுத்ததால், குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிராளியினால் சுயவிருப்பில் வழங்கப்பட்டுள்ளதாக '2017ம் ஆண்டு நவமபர் மாதம் 8ம் திகதி கட்டளை வழங்கினார்.

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெ.சுலக்சன்

# எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதியான்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகப்பெருமான் ஆலயத்தின் வரலாறு ஐந்து, பத்து வருடங்கள் பழமையானதல்ல. அது கந்தபுராண வரலாற்றுக் காலத்திலிருந்து ஆரம்பிக்கிறது. முருகப்பெருமானின் தூதுவராகச் செல்லும் வீரபாகுதேவர் சந்திக்காலம் வரவே வல்லியாற்றங்கரையில் கால்பதித்து ஸ்ஞானம் செய்து முருகப்பெருமானை எண்ணி வேலினை ஆற்றங்கரையோர மரத்தடியில் நிறுத்தி சந்திக் காலப் பூசையினைச் செய்துவிட்டு மீண்டும் தூது செல்லும் பணிக்கு புறப்பட்டுச் சென்றதாக கந்தபுராணத்தில் கூறப்படுகிறது.

## அருள்பெற்ற ஜராவசு

பின்நாளில் செல்வச்சந்நிதிக்கும் கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்குமான தொடர்பை ஜராவசு எனும் யானையின் வரலாறு குறிப்பிடுகிறது. ஜராவசு, தேவலோகத்தில் பணிபுரியும் இறை தூதுவர்களில் ஒருவராவார். இறை தூதுவரான கந்தர்வன் தேவலோகத்தில் செய்த சிறு தவறுக்காக வியாழ பகவானின் சாபத்துக்குள்ளாகின்றார். அதன் விளைவாக ஜராவசு எனும் யானையாக மாறி சாப விமோட்சனம் தேடி கதிர்காமக் காடுகளில் அலைந்து திரிந்தார். அக்காலப் பகுதியில் ஒரு நாள் கதிர்காமக் காடு வழியாகச் சென்ற சிகண்டி முனிவரை ஜவாரசு கோபத்துடன் தாக்குவதற்கு முற்பட்டார். உடனே சிகண்டி முனிவர் பாதை ஓரத்தில் நின்ற வெற்றிலைக் கொடியிலிருந்து இலை ஒன்றைப் பறித்து 'வேலாக மாறி யானையைத் தாக்க வேண்டி சடாச்சர மந்திரத்தினை உச்சாடனம் செய்து முருகனை வணங்குகின்றார்'. அப்போது அந்த வெற்றிலை வேலாக மாறி யானையின் தலையை தாக்கி ஞானத்தை வழங்குகிறது. ஞானத்தினைப் பெற்ற ஜவராசு சிகண்டி முனிவரைப் பணிந்து செய்த தவறுக்கு மன்னிப்புக் கோரி தனக்கான சாபம் நீங்க வழி கூறுமாறு வேண்டினார். அதற்கு சிகண்டி முனிவர் ஈழத்தில் வடபால் அமைந்த வல்லி நதிக்கரையோரம் உள்ள புனிதம் நிறைந்த பூவரச மரத்தடியில் தியானம் இருந்து இறைவனை அடைவாய் எனக் கூறி அருளினார். அதனை கேட்ட ஜராவசு முனிவருக்கு நன்றி கூறி வடபால் நகர்ந்து தற்போது உள்ள சந்நிதி ஆற்றங்கரை பூவரசின் கீழ் கடுந்தவம் புரிந்து இறைநிலையாகிய முத்தியை அடைந்தார். அவ்விடத்தில் இன்றும் ஜராவசுவின் சமாதி உள்ளது. அதன் மேல் நாகதேவதைகள் காவல் செய்து வருகிறார்கள். இந்த நிகழ்வு நிலைத்து நிற்கும் வகையில் இன்றும் வீதி உலா வரும் வேல் பெருமானின் நடுப்பகுதியில் வெற்றிலை ஒட்டப்பட்டு உற்சவம் நடைபெறுகிறது. வீரபாகு தேவரால் பூசை செய்யப்பட்ட அதே இடத்தில் ஜராவசு சமாதி அடைந்து புனிதம் பெற்ற இடமாக இந்தப் பூவரசமரத்தடி அமைந்துள்ளது.

## அற்புதங்களின் பிறப்பிடம்

1844ஆம் ஆண்டுக்கு முன் எனக்கருதப்படும் காலத்தில் முருகப்பெருமானின் அருளாசிகளுடன் ஞானத்தினை உடையவராக மருதர் கதிர்காமர் பிறந்தார். காலப்போக்கில் வேல்பெருமானை உணர்ந்து அவரின் இருப்பிடத்தை அறிந்து புனித பூவரச மரத்தடியில் தியானம் இருந்து வழிபட்டு வந்துள்ளார். அவருக்கு அருள் பாலிக்க எண்ணிய முருகப்பெருமான் பல சோதனைகள் கொடுத்து பரீட்சித்தார். கதிர்காமரின் பக்தியைக் கண்டு மனங்குளிர்ந்த முருகப்பெருமான் அவரின் முன் தோன்றி நீ எனக்கு பூவரச மரத்தடியில் பூசைசெய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். 'எனக்குப் பூசை முறைகள் தெரியாது நான் எப்படி பூசை செய்வேன்' என தயங்கினார் கதிர்காமர். அவரிடம் முருகன் 'உன் கண்களை மூடித்திற' எனக் கூறினார். கண்களை மூடும் போது சந்நிதியில் நின்ற கதிர்காமர் கண்களைத் திறக்கும்போது கதிர்காமத்தில் நின்றார். அங்கே நடைபெறும் வாய்கட்டி பூசை செய்யும் முறைகளை முருகப்பெருமான் கதிர்காமருக்குக் காண்பித்து அவை பற்றிய விளக்கத்தைக் கூறி வெள்ளிவேல் ஒன்றினையும் கதிர்காமரிடம் கொடுத்து கண்களை மூடித்திற எனக் கூறினார். கண்களைத் திறந்த கதிர்காமர் சந்நிதி பூவரசமரத்தடியில் கையில் முருகப்பெருமான் வழங்கிய வேலுடன் நின்றார். அன்றிலிருந்து கதிர்காமர் முருகப்பெருமானுக்கு விளக்கேற்றி தூய்மை செய்து வரலானார். கதிர்காமர் சிறப்பான முறையில் பூசைகள் செய்து வந்தாலும் தனக்கு ஏற்படும் சந்தேகங்களை முருகனிடத்தில் கேட்டுக்கொள்வார். இதுவே செல்வச்சந்நிதி ஆலயம் தோன்றிய வரலாறாகும்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதியானின் தேர்த்திருவிழா இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

## அழிக்கப்பட்ட பொக்கிஷம்

இலங்கையின் உள்நாட்டுப்போர் செல்வச்சந்நிதியானையும் இலக்குவைக்கத் தவறவில்லை. செல்வச்சந்நிதி ஆலயத்துக்கான முதலாவது சித்திரத்தேர் 1981ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, 1984ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. அப்போது இந்தத் தேர் இலங்கையில் முதலாவதும் உலகத்தில் இரண்டாவதும் பெரிய தேராகக் காணப்பட்டது. 1986ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி இலங்கை இராணுவத்தினரால் தேர் தீயிட்டு அழிக்கப்பட்டது. ஒரு வரலாற்று தீயுடன் தீயானது. அதையும் தாண்டி செல்வச்சந்நிதியான் இன்று புத்துணர்வுடன் மிளிர்கின்றான் என்றால், அது பக்தர்கள் அவன் மீது கொண்டுள்ள அன்பும் பக்தியுமே காரணம்.

ஆரம்ப காலத்தில் மழை, வெயிலிருந்து பாதுகாக்க பனை ஓலைக் குடிசையாக இருந்த ஆலயம் படிப்படியாக வளர்ச்சி அடைந்து இன்று உயரமான மணிக்கோபுரம், உயரமான தேர்முட்டி, கட்டடங்களுடன் காட்சியளிக்கும் ஆலயத்திலிருந்து சந்நிதி வேலன் அருள்பாலிப்பது சைவப் பெருமக்களாகிய எமக்கு பெரும் பாக்கியமே.



இலங்கையின் உள்நாட்டுப்போர் செல்வச்சந்நிதியானையும் இலக்குவைக்கத் தவறவில்லை. செல்வச்சந்நிதி ஆலயத்துக்கான முதலாவது சித்திரத்தேர் 1981ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, 1984ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. அப்போது இந்தத் தேர் இலங்கையில் முதலாவதும் உலகத்தில் இரண்டாவதும் பெரிய தேராகக் காணப்பட்டது. 1986ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆம் திகதி இலங்கை இராணுவத்தினரால் தேர் தீயிட்டு அழிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ப்பையில் கவிழ்க்கப்பட்ட மரபு

○ கோகுலராகவன்




'வால்காவிலிருந்து கங்கை வரை' பதினைந்து வயதில் வாசித்த ஞாபகம்.

அந்தக் காலத்தில் அது ஒரு வாசிப்பு அடையாளத்தை ஏற்படுத்தும் நூலாகவே இருந்தது. எமது நாகரிகத்தின் மீதான தேடல் தொடங்கிய பின் இந் நூலைக் கொண்டாடியது தவறா ? என்று தோன்றுகிறது. மீண்டும் இப்பொழுது வாசித்த பொழுது அந்த வசீகரம், பிரமிப்பு இல்லாமல் இருப்பதாகவே தோன்றுகிறது. இந்தியா ஆரியர்களால் உருவாக்கப்பட்ட நாடாகவே காட்ட நூலாசிரியர் முனைந்திருப்பதாகவே எனக்குப் படுகின்றது.

இந்திய நாகரிகத்தில் தமிழர்களின் பங்கு என்னவென்று இந்த நூல் காட்டவில்லை.




இந்தோ - ஆரிய நாகரிகம் அகன்ற பாரதத்தின் மையம் என்பதை மையப்படுத்தியே புத்தகம் எழுதப்பட்டிருப்பது ஏதோ இருட்டடிப்பாகவே தோன்றுகிறது. ஆரியர் நாகரிகம் நீண்ட வரலாற்றை கொண்டிருக்கலாம். ஆனால் தமிழர் வரலாறு அதற்கு குறைவானது அல்ல .

இத்தனைக்கும் முப்பது மொழி பேசத்தெரிந்து அதில் தமிழ் ஒன்றாக இருக்கும் பட்சத்தில் தமிழர் நாகரிக வளர்ச்சி எங்கிருந்து தொடங்கியது என்பதை கண்டுபிடிப்பது ராகுல சாங்கிருத்தியாயனுக்கு ஒன்றும் கடினமான காரியமல்ல.

நாகதத்தன் என்னும் கதையில் நாகதத்தன் ஏதென்ஸ் நோக்கிப் பயணிப்பதாக வருகின்றது. ஆரியர்கள் கடல் வழிப்பயணத்தை மேற்கொண்டவர்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை.ஆரியர்கள் கடற்படையை உருவாக்கியவர்கள் என்பதற்கும் வரலாற்று ஆதாரம் இல்லை.கதை கற்பனைக்கதைதான்.ஆனால் அது உண்மை வரலாற்றை அண்டியதாக இருக்க வேண்டியது எழுத்தின் வெற்றியாக அமைய அவசியமாகிறது.

கி.பி. பத்தாம் நாற்றாண்டின் அண்டிய காலப்பகுதியில் சோழர் கடற்படை உலகின் பலமான கடற்படையாக இருந்தது என்பதை தமிழ்நாட்டில் தங்கி இருந்த காலத்தில் ராகுல சாங்கிருத்தாயன் அறியாமல் போக வாய்ப்பில்லை.

தமிழ்நாடு நோக்கிய ஆரியப் படையெடுப்பை சேர, சோழ, பாண்டியப் படைகள் இணைந்து தடுத்ததாக வரலாறு இருக்கிறது. ஆரியர்களின் இந்திய ஆக்கிரப்பு என்பது என்றைக்கும் உவப்பானதாக கருதப்படக்கூடிய ஒன்றல்ல. ஏற்கனவே இருந்த நாகரிகங்களை ஆரியர்கள் அழித்தார்கள் என்பதை வேத இலக்கியங்கள் ஒப்புக்கொள்கின்றன.

தஸ்யுக்கள் என்கிற தாசர்கள் அடிமைகளாக இருக்கவேண்டியவர்கள். அல்லது அழிக்கப்படவேண்டியவர்கள் என்கின்றன வேதங்கள்.இந்த தஸ்யுக்கள் இந்தியாவின் ஆதிக்குடிகளாக இருந்தவர்கள்.

இவர்கள் தமிழர்களாக இருக்கலாம். சிவன் வழிபாட்டை வேதங்கள் நிராகரிக்க வேண்டியதன் அவசியம் என்னவென்றால் அது தமிழர்களை நிராகரிப்பதன் உள்நோக்கமாகக் கொண்டதே. இத்தகைய வேத கால நாகரிகத்தை ராகுல சாங்கிருத்தியாயன் தனது எழுத்தின் அடிப்படையாகக் கொண்டிருப்பதும் இன்னொரு நாகரிகத்தின் மீதான மறுதலிப்பே.

ஆரிய நாகரிகம் சிவனை உருத்திரனாக்கி, முருகனை சுப்பிரமணியனாக்கி, மாயோனை திருமாலாக்கி, கொற்றவையை சத்தியாக்கி ஒரு வழிபாட்டு மரபை கவிழ்த்ததை நாம் ஒரு தர்ப்பை புல்லில் இழந்து கொண்டிருக்கிறோம். கண்ணகி கோயிலை ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி என்ற ஆரிய பெயர் கொண்ட கோயிலாக மாற்றுவதை எந்தவித மறுதலிப்பும் இன்றி ஏற்றுக்கொள்கிறோம்.

ஆரியர்கள் உருவாக்கிய சமூக மாற்றம் தமிழ் மரபில் இன்னும் தாக்கத்தை உண்டு பண்ணிக்கொண்டு இருப்பதை நாம் இன்னும் உணரவில்லை. சில வேளை அதை ஒட்டி வாழ்வது எங்களுக்கு ஒரு வகை உவகையை பெருமையைத் தருவதால் ஆரிய நாகரிகத்தை கொண்டாடும் அடிவருடித்தனமும் எம்மிடம் இருக்கவே செய்கிறது.

இதையே "வால்காவிலிருந்து கங்கை வரை" யும் செய்திருக்கிறது. தமிழனிடம் இருக்கிற ஒரு குணம் எந்த ஒரு புதிய விடயத்தையும் நாகரிக மாற்றம் என்று சொல்லி எமது கலாசாரத்தில் நுழைய அனுமதிப்பது. இதன் ஒரு வகையே தமிழ் மொழிக்குள் வடமொழியின் உள்நுழைவு. இதில் ஏற்பட்ட விழிப்புணர்வு காலம் கடந்து விட்டதால்தமிழ் எது ?வடமொழி எது ? என்று இலகுவில் அறிய முடியாதளவுக்கு போய்விட்டது.என்னைப் பொறுத்தவரை.

வால்காவிலிருந்து கங்கை வரை 'தமிழர் நாகரிகத்தை' கொண்டாட மறந்த நூல் .



## பாகம் 2



## ஊர்ப்தினம்

○ இராகவன்

கடைசியா இளையண்ணராக்கள் ஹெலிகாறனோட விட்ட சேட்டையளப் பற்றிச் சொன்னனான். பிறகு கோயில் பரிபாலன சபைத் தலைவராக்கள் வந்து உவங்களைப் பேசிக் கலைச்சாப் போலைதான் எல்லாம் முடிவுக்கு வந்திச்சுது. அதுக்குப்பிறகு பத்திரகாளி கோவிலுக்கு மேலால ஹெலிகொப்ரர் போகேக்குள்ள ஒருக்கால் நல்லாப் பதிஞ்சு ஒரு மூண்டு றவுண்டடிச்சு உவங்கள் நிக்கிறாங்களோ எண்டு பாத்திட்டுத்தான் போகும். ஒப்றேசன் லிபறேசன் தொடங்கிக் கொஞ்சநாள் இயக்கம், ஆமியை முன்னேற விடாமல் மறுத்தான் குடுத்துக்கொண்டு நிண்டிச்சுது. பிறகு நிண்டு பிடிக்கேலாமல் பின்வாங்கினாப்போல ஆமி முன்னேறி ஊருக்குள்ள வந்திட்டான். ஆமி வாறான் எண்டாப்போல சனம் முழுக்கத் தச்சந்தோப்புப் பிள்ளையார் கோயிலுக்குப் போகிட்டுதுகள்.

அம்மா "ஒருடமும் வெளிக்கிறேல்லை வீட்டிலயேயிருப்பம். வாறது வரட்டும் "எண்டு சொல்லிப்போட்டு இருந்திட்டா. நானும் மூத்தண்ணாவும் அம்மாவோடதான் இருந்தனாங்கள். நவண்ணா வீட்டில தாயும் அவனுந்தான். தமக்கையாக்கள் வரணிக்கு 'உருவிக்குடுத்திட்டினம்'. பொழுதுபடேக்குள்ள நவண்ணாவுந்தாயும் வீட்டை வந்திடுவினம். பிறகு அடுத்த நாள் விடியத் தங்கடை வீட்டைபோகிடுவினம். இளையண்ணா வீட்டில பாதுகாப்பில்லையெண்டு பெரிய தோட்டத்திலயிருக்கிற தங்கப்பெரியம்மா வீட்டிலபோய் நிண்டவன். ஆமிவாறான் எண்டாப் போலை பெரியம்மா வீட்டாக்கள் எல்லாம் தச்சந்தோப்புப் பிள்ளையார் கோயிலுக்கு ஓடிச்சினம். இளையண்ணனும் வேற வழியில்லாமல் அவயளுக்குப் பின்னால போகவேண்டி வந்திட்டுது. கோயிலை ஆமிக்காரன் வந்து றவுண்டப்பண்ணி சின்னப் பொடியள், பெம்பளையள், வயதுபோனாக்களையெல்லாம் விட்டுட்டு இளம்பொடியளைச் சாய்ச்சுக் கொண்டுபோனாங்கள்.

53

அண்டைக்குப்பின்னேரம் ஒருமூண்டு மணியிருக்கும். நவண்ணான்ர தாய் எங்கட வீட்டை ஒரு பதகளிப்போடை ஓடியந்தா. 'எடியே! அகிலம், ஆமிவந்திட்டானடி 'எண்டு அம்மாட்டச்சொன்னா. அப்பேக்குள்ள நானும் மூத்தண்ணாவும் வீட்டைதான் நிண்டனாங்கள். அவசொன்னதைக் கேட்டாப்போலை எங்களுக்கும் நடுங்கத் தொடங்கியிட்டுது. " இந்தத் தடுதாடிக்கை உந்தக்குறுக்காலை போவான் எங்கைபோய்த் துலைஞ்சான் எண்டுதெரியேல்லையே? " எண்டு அம்மாவும் பதகளிக்கத்தொடங்கியிட்டா. நவண்ணான்ர தாய் 'எடியே! உதிலை நிண்டு ஒருக்கால் எட்டிபாரனடி புதினத்தை' எண்டுசொன்னா.

அப்ப எங்கட வீட்டு விறாந்தையில நிண்டு எட்டிப்பாத்தால் றோட்டில என்ன நடக்குதெண்டு கிளியறாத் தெரியும். நானும், அம்மாவும், மூத்தண்ணாவும் விறாந்தையில நிண்டு எட்டிப்பாத்தம். என்னத்தைப் பாக்கிறது?வல்லிபுரக் கோயில் கடல் தீத்தத்துக்கு சரியிறமாதிரி றோட்டுமுழுக்க இளம்பொடியள் சாய்ப்பில போச்சினம். முன்னுக்கும் பின்னுக்கும் இடைக்கிடையும் சட்டைத்தொப்பி போட்ட ஆமிக்காறர் போறாங்கள். நான் அண்டைக்குத்தான் ஆமிக்காறரை நேரில கண்டன். இதுக்குப் பின்னால சாய்ப்பில போற இளம்பொடியளின்ர தாய்மார் அழுது கொண்டுபோச்சினம். ஆமிக்காறர் அவயளை பின்னால வரவேண்டாம் எண்டு சொல்லிக்கொண்டு போறதும் தெரிஞ்சுது. எனக்குக் கால்ரெண்டும் நடுங்கத் தொடங்கிட்டுது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.துவாரகன்

# நினைவுகளில் தமிழறிஞர்: 6

## க. உமாமகேசுவரம்பிள்ளை
## (05.05.1934 - 20.04.2024)

## நின்மலரடி தொழும் வல்லபம் ஒன்றறியேன்

### உமாமகேசுவரனது இறுதி நாள்களும் பிரார்த்தனைப் பாடல்களும்

பண்டிதர் உமாமகேசுவரன் அவர்களது இறுதி நாள்களில் அவருடன் மாலைப் பிரார்த்தனை களில் கலந்துகொள்வேன். திருநாவுக்கரசு நாயனாரது 'வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி' என்ற போற்றித் திருத்தாண்டகப் பதி கத்தைப் படிக்கச் சொல்வார்.

அதன் பிறகு திருநாவுக்கரசரது கோயில் திருப்பதிகத்தில் வரும் இரு பாடல்கள். இந்தப்பதிகத்தின் 2 ஆவது பாடல் 'பொருவிடை யொன்றுடைப் புண்ணியமூர்த்தி ...' என்று தொடங்கும்; 'தில்லைச்சிற்றம்பலவன் றிரு வடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்ப தென்னே' என்று முடிவுறும். மற்றது, 'தெரித்த கணை யாற்றிரிபுர மூன்றுஞ்செந் தீயின்மூழ்க' என்று தொடங் கும் பாடல்... இது 'தில்லைச் சிற்றம்பலவன் சிரித்த முகம் கண்ட கண்-கொண்டு மற்று-இனிக் காண்பது என்னே' என்று நிறைவுறும். இறுதி நாள்களில் உமாம கேசுவரனது கண்கள் தில்லைச் சிற்றம்பலவனது திருவ டியைக் கண்டு இவ்வுலகை நீத்தலில் நீங்காதிருந்தன!

உமாமகேசுவரன் விரும்பிப் படிக்கும் அபிராமி அந்தா திப் பாடல்களில் பிரதானமானது,

***வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேனின் செம்***
***பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு***
***வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன் தொடுத்த***
***சொல்லவமாயினு நின்றிரு நாமங்கள் தோத்திரமே***

### இதன் பொருள் :

மாற்றுயர்ந்த பொன்மயமான மேரு மலையையை வில் லாகக் கொண்ட சிவபெருமானுடன் வீற்றிருக்கும் அபி ராமி தேவியே! சிறியேன் கவிபுனையும் வல்லமை எதையும் அறியேன்; உன்னுடைய மலர் போன்ற மென் மையான சிவந்த தளிரனைய திருவடியையன்றி வேறு பற்று எதுவும் இலேன்; பாவ புண்ணியம் என்ற வினை களால் சூழப்பட்ட நான் பாடிய சொல் (அதைப் பாடல் என்று கூட அபிராமிப்பட்டர் சொல்லவில்லை "சொல்" என்கிறார்) நன்றாக இல்லாவிட்டாலும் உன்னுடைய திருநாமம் ஆகிய மந்திர மலர்கள் அங்கே வருவதால், அவை தோத்திரமேயாம். (இந்தத்தோத்திரங்களை ஏற்று இன்னும் எனக்கு அருள்புரியாது இருக்கலாமோ?)

**"வினையேன் தொடுத்த சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே"** என்ற பாடல் அடி யைப் படிக்குந் தோறும் உமாமகேசுவரன் மெய்யுருகிக் கை கூப்பி வணங்குவார்.


அப்பர் பெருமானின் நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற மறுமாற்றுத்திருத்தாண்டகத் தில் வரும் **"இன்பமே யெந்நாளும் துன்பமில்லை"** என்ற அடியை அவ்வப்போது அவர் சொல்வார்.

### கடைசியாகக் கேட்ட சங்கீதம்

ஒருவர் வாழ்வின் இறுதிக் காலத்தில் இருக்கும்போது அல்லது மரணப்படுக்கையில் இருக்கும்போது அவ ருக்கு அருகில் இருந்து படிக்கவேண்டியவை என்று முன்னோர்கள் சிலவற்றைக் கூறியிருக்கிறார்கள். இம யத்து மகான்களுடன் வாழ்ந்தவர்களைச் சந்தித்தபோது குமரகுருபரர் இயற்றிய கந்தர் கலிவெண்பாவைப் பாடு வதன் சிறப்பைக் கூறினர்.

ஒருவரது இறுதிக் காலத்தில் கந்தர் கலிவெண்பாவைப் பாடுவது கந்தபுராணத்தைப் படிப்பதற்குச் சமமானது. வாய் பேசமுடியாத 5 வயதுப் பாலகனான குமரகுருப ரனை தாயார் செந்தூர்ப் பதியில் வீற்றிருக்கும் செவ் வேளின் முன் கிடத்தி அழுது தொழுது மன்றாடிய வேளை, பச்சிளம் பாலகன் புன்முறுவல் பூத்து அலர்ந்த செவ்வேளின் பூங்குமுதச் செவ்வாயை நோக்கி, எமது சென்ம விடாய் தீர்வதற்காகப் பாடியருளிய, "பூமேவு செங்கமலப் புத்தேளும், தேறரிய பாமேவு தெய்வப் பழம றையும்..." என்று தொடங்கும் நறுமணங்கமழும் மந்திர மலர்களை நிகர்த்த சொற்களால் ஆன 122 அடிகளைக் கொண்ட கந்தர்கலி வெண்பாவைப் பாடி நிறைவு செய் தின்றது. உலகம் உவப்படைந்தது.

சொற்கள் மந்திரங்களை நிகர்த்தவை என்பர் ஆன்றோர். அதுவும், வாய்பேசாத பாலகன் செந்திற் பதிபுரக்கும் செவ் வேளின் அருளால் முதன்முதல் உதிர்த்த, பாடிய கந்தர் கலி வெண்பாவைவிட தமிழ்க் கடவுளாகிய கந்தவேட் பெருமானுக்கு நாம் அர்ச்சிக்கத் தக்க மந்திர மலர்கள் வேறுமுண்டோ? அந்தப் பாலகன், "பூமேவு..." என்று உச்சரிக்க திருச்செந்தூர் மூலவரில் இருந்து ஒரு பூ நிலத் திலே விழுந்தது என்பது வரலாறு.




### பாரெல்லாம் கூடி பத்தி பரவும் 'நல்லூர்த் திருவிழா'

நல்லூரிலிருந்து அருளாட்சிபுரியும் கந்தவேட் பெருமா னது எல்லையில்லாக் கருணையை எடுத்தியம்பவல்ல பாடல்கள் பல இருக்கின்றன. சிவதொண்டன் செல்லத் துரை சுவாமிகள் யாத்தருளிய 32 கிளிக் கண்ணிகள் எல்லையில்லா அருளுடையவனும் எல்லார்க்குமெளிய னுமான நல்லூரானது அருட் திறத்தை, ஒளிவீசும் வேலின் மாட்சிமையை விளம்பும் தேனிலுமினிய ஈடிணையில்லாக் கவிகள்; சுவாமிகளது சிவசிந்தனை நூலில் 'நல்லூர்த் திருவிழா' என்ற பகுதியில் உள.

"எங்கள் சுவாமி" ஆராலும் அளந்தறியா ஆறுமுகசுவா மியின் அருளையெல்லாம் சொல்மணிகளாகக் கோர்த்து, ஆறுமுகசுவாமி வாசலை நாடும் அடியார் கூட்டத்தின் மகிமையையும், ஒருபோது உணவருந்தி ஒழுங்காகக் கோயில் சென்றும், காவடி ஆடியும் களி கொண்டு பாடியும், அண்டர் தொழும் நாயகனாம் குமர வேளின் சேவடி தொழும் அடியார்களைத் தெய்வங்கள் என்று வர்ணித்தும் எழுதிய கிளிக் கண்ணியை விட நல் லூர்ப் பதிபுரக்கும் செவ்வேளுக்குச் சாத்தவல்ல வாடா மாலைகள் வேறுமுண்டோ?

ஈராறு கையோனை, எழிலாரும் சேயோனை, ஆராத காதலுடன் அப்பனே முருகாவென்று அழுது தொழுது ஏத்தும் அடியார்களின் பத்தி மேலீட்டைப் பாடிய சுவாமி களின் வானளந்த பெருமையைச் சொல்லும் வல்லமை மகமாயையில் பட்டுழலும் சிறியேனுக்கு ஏது? இந்த சுவாமியின் பெயரை அவரது மீளா அடியவர்கள் ஒருபோ துமே உச்சரிக்கமாட்டார்கள். "எங்கள் சுவாமி" என்று தான் சொல்வார்கள். "எங்கள் சுவாமி" எனும் மகான், பாடிய பக்திச் சுவைநிறைந்த தெய்வீகக் காதற் பாடல் களின் சிறப்பைச் சிராகச் செப்ப இந்தச் சிறியேனால் தகுமோ? உமா மகேசுவரனுக்கு பிடித்த பதி கங்களைப் பாடிவிட்டு கந்தர் கலிவெண்பாவைப் பாட விரும்புவேன். பிறகு "எங்கள் சுவாமி" பாடியருளிய "நல் லூர்த் திருவிழா" எனும் "கந்த சுவாமியாரின்" அருளொழு கும் புகட்பாக்களைப் விருப்பு டன் பாடுவேன். ஆசிரியருக்குப் பிடித்த அபிராமி அந்தாதிச் செய்யுளையும் பாடுவது வழமை.

இப்படியாக மாலையாகியதும் ஒருவாறு எனது அலுவலக வேலையை நிறைவுசெய்து அவரது இருப்பிடத்துக்குச் சென்று படித்து வந்தேன். தினமும் செல்வதற்கு முயன் றேன். தொடர்ந்து 10 தினங்கள் சென்றேன். பின்பு சில நாள்கள் செல்லவில்லை. வேலைமுடியாது. ஒருநாள் சாவித்திரி ஆசிரியை தொலைபேசி அழைப்பெடுத்துச் சொன்னார், "அவர் உங்களுக்கு சிரமம் இல்லையென் றால் உங்களை வந்து பிரார்த்தனைப் பாடல்களைப் படித்துவிட்டுச் செல்லுமாறு கேட்கின்றார். நீங்கள் வந்து பதிகங்களைப் பாடிச் செல்வது எங்களுக்கு ஆறுதலாக இருக்கிறது" என்று.

ஆசிரியப்பிரானது வார்த்தைகள் "யமுனா கல்யாணியை" கேட்டது போன்ற உருக்கத்தை ஏற்படுத்தும். அவரைச் சென்று பார்த்துவிட்டு விடைபெறும்போது, "உங்களுக்கு நான் கைமாறு செய்வேன்" என்று தனது அன்பினை வெளிப்படுத்துவார்.

### உமாமகேசுவரனது மேதைமையும் சான்றாண்மையும்

"இந்த உலகம் கனவிலும் கற்பனையிலும் காணமுடி யாத விடயங்களை பிரார்த்தனை கொண்டுவரும்" (More things are wrought by prayer than this world dreams of. Alfred Lord Tennyson) என்ற டெனின்சனின் வாச கங்களை அவ்வப்போது உமாமகேசுவரன் நினைவு கூருவார்.

சிறுவயதில் தனது பெற்றோரை இழந்தவரும் ஏறத்தாழ 1800 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த உரோமானியச் சக்கரவர்த்தியும் தத்துவஞானியுமான மார்க்க அரேலியர் (Marcus Aurelius) எழுதிய தியானம் என்ற நூலில் காணப்படும் ஆத்ம சிந்தனைகள் ஆசிரியர் உமாமகே சுவரனை எனக்கு நினைவூட்டும். ஆசிரியர் உமாமகேசு வரன் தனது வாழ்வைச் செதுக்கியது அப்பா தான் என் பார். உமாமகேசுவரனது மேதைமை, அறவுணர்வு எங் கிருந்து வந்தது? உமாவின் தந்தை பண்டிதர் சி. கதிரிப் பிள்ளை, பெரியத்தான், சிறிய தாயார் முதலான உறவி னர்கள், அன்புசால் ஆசிரியர்கள், விழிசிட்டிக் கிராமம் முதலாகப் பலவும் உமாமகேசுவரன் என்ற ஆளு மையை உருவாக்கியிருப்பினும் அவர் வாழ்ந்த வீடுதான் அவரது பல்கலைக்கழகம்.

உமாமகேசுவரனைப்போல தனது தாயையும் தந்தையும் அன்புடன் நினைவு கூரும் மார்க்க அரேலியர், "வீட்டிலே ஒருவருக்கு நல்லாசிரியர் வாய்க்கப்பெற்றால், அவர் பாடசாலைக்குச் செல்லாமலே நன்னெறிகளையும், நற் சிந்தனைகளையும், வாழ்வின் எளிமையையும், கற்றுக் கொள்ளவதுடன் ஞானத்தையும் பெறமுடியும்" என்று தனது பூட்டனாரிடமிருந்து அறிந்து கொண்டதாகக் கூறு கின்றார்.

உமாமகேசுவரனது 'நூற்கடல் அமுதம்' என்ற அவரது நாட்குறிப்பிலிருந்த ஒரு வாசகத்துடன் இப்பகுதியை நிறைவு செய்ய விளைகின்றேன். இது காந்தியைப் பற்றி ஜவர்கலால் நேரு கூறியது. "Where he sat was a temple and where he walked was a hallowed ground" Jawaharlal Nehru. காந்தி எங்கு சென்றாரோ அந்த இடம் ஆலயமாகியது. அவர் நடந்து சென்ற இடம் எல் லாம் புனிதத்தலமாகியது. உமாமகேசுவரன் தனது நாட் குறிப்பிலே, "காஞ்சிப் பெரியவாளுக்கும் இது பொருந் தும்" என்று எழுதியிருக்கிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org